என்று தணியும் எங்கள் சுதந்திர தாகம்

மார்ச் 23
பங்குனி
உத்தரம்
பழநி

February 2016

FREE ISSUE

# லண்டன் தமிழர் தகவல்

## London Tamil's Information





மாதாந்திர செய்திச் சஞ்சிகை

A monthly information digest

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நல்ல சோறு சாப்பிட வேண்டுமா AMIRTAA அரிசி வாங்குங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழர் தகவல்
## Tamil Information

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல் - குறள்


திருவள்ளுவர் ஆண்டு 2047

தை

மலர் : 13

இதழ் : 153

பிப்ரவரி - 2016



முகவரி :
41, HADDINGTON ROAD
BROMLEY
KENT BR1 5RG, U.K.
Email : jothy5@yahoo.co.uk



வெளியீடு :
திருமுருகன் அறிவகம்
லண்டன்
Thirumurugan Arivagam
London

கணக்கு எண் : 29513668
வங்கி இலக்கம் : 77 91 29
வங்கி : Lloyds TSB



ஆசிரியர் : அரவிந்தன்
Editor : Aravindan

வடிவமைப்பு :
**தமிழ் அலை**
Layout :
Tamil Alai, tamilalai@gmail.com



படைப்புகள் யாவும்
ஆக்கியோரின் உரிமைகளே


4000 பிரதிகள்

தமிழர்களே! தமிழர்களுடன்
தமிழில் பேசுங்கள்!!


நல்ல சோறு சாப்பிட AMIRTAA அரிசி வாங்குங்கள்

UNLEASH
THE POWER OF GOLD
THARANI

JEWELLERY & PAWNBROKERS
UK'S CHEAPEST GOLD LOANS
STARTING FROM 2.95% PER MONTH

GOLD
LOANS
THE CHEAPEST GOLD
LOAN PROVIDEDR IN WEMBLEY

* NO Need to Sell Your Valuable Jewellery, When You can Get Quick Loan and Easy Terms.
* Use Your Idle Jewellery for Productive Purpose by Availing Our Loans.
* Loans Aqainst Gold from 2.95% per Month, it's U.K's lowest Rate for Gold Loans.
* Cheaper than Unauthorised Overdrafts from High Street Banks.
* No Credit Check Required
* Simple Procedure. Loan sanctioned in Just 5 Minutes.

Our Rates of Interest
£100 to £4999 2.95 % Per Month
APR 38.7%

Loan Term: Up to 6 Months
Documents Required
Photo ID - Passport or UK Driving Licence
Proof of Address - Any Utility Bill or Bank Statement not Older than 3 Months

Terms and Conditions

The maximum loan term is for 6 months. If loan cannot be repaid during this period, a renewable can be made, after interest on the loan is paid in full.

If you have borrowed £75 or less, and if you redeem the loan in 6 months time,we will keep the pledged Gold. If you have borrowed more than £75 we are entitled to sell your pledge to cover the outstandings The pledge


வாசகர்களே! எமது விளம்பரதாரர்களை மனமுவந்து ஆதரியுங்கள்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அய்யன் திருவள்ளுவர் தமிழ் மன்றம் வழங்கும்

# திருக்குறள் போட்டி

**தினம் ஒரு திருக்குறள், 365 தெரிவு செய்யப்பட்ட குறள்கள் மனப்பாடம் செய்து தமிழர் தகவல் மூலம் தெரியப்படுத்தினால் - சிறப்பு பரிசாக**



**முதல் பரிசு**
**பவுன் 200.00**

**இரண்டாம் பரிசு**
**பவுன் 100.00**

**மூன்றாம் பரிசு**
**பவுன் 50.00**




## 365 அடங்கிய

**திருக்குறள் புத்தகத்தை போட்டியில் கலந்து கொள்பவர்கள்**

## இலவசமாக

**பெற்றுக் கொள்ளலாம்.**

**தொடர்புக்கு: தமிழர் தகவல்**
**லண்டன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




லண்டனில் முதல் தர பொன்னி அரிசி AMIRTAA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





நல்ல சோறு சாப்பிட வேண்டுமா AMIRTAA அரிசி வாங்குங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமதி ஏசலா அல்பிரட்

## அவர்களின் மறைவுக்கு தமிழர் தகவலின் கண்ணீர் அஞ்சலி





# MRS. URSULA (PUSHPAM) ALFRED

## Passed away peacefully on February 24, 2016 in London

Dearly beloved wife of Bastian Anthony Alfred of Karampon, Kayts Loving daughter of late S.P. Sinnathurai and Annammah of Suruvil Kayts Loving daughter in law of late Anthonipillai Rasiah and Innesiapillai (Kannadi) Rasammah Affectionate sister of Lilly Imelda Nicholas, Mary Immaculate Sylvester, Beatrice Gunaretnam, Joe Amirtharajah and the late Emalianus Loving sister in law of Victor Nicholas, Sylvster, Gunaratnam, Philominah Amirtharajah, Agnes Francis Xavier, late Earnest Rajanayagam, Rajayogam, Edmond and Juliet Mathuranayagam. Devoted aunty of Ivan, Eileen, Deva, Anton, Evelyn, Tony, Shiromi, Sharmalene, Theepan, Gubera, Anica and Sarah Funeral arrangements will be notified later.

-B.A. Alfred



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் உள்ள உறவுகளை வியப்பில் ஆழ்த்த மற்றும்
விரும்பும் உணவுகளை அன்பளிப்பாக இலங்கையில் உள்ள
இல்லங்களின் வாசல் சென்றடையும் துரித சேவை.
விரையுங்கள் www.orderfood.lk இணையதளத்துக்கு




# www.orderfood.lk

**Order foods & gifts for your friends & loved ones in Sri Lanka**
**Order online at www.orderfood.lk**

**Order from as little as £10**

**Get 10 % discount on your order.**




Promotion code:UK150630 Offer valid until:30/06/2015

- கொழும்பு
- மட்டக்களப்பு
- யாழ்பாணம்
- திருகோணமலை
- கிளிநொச்சி
- வவுனியா
- மன்னார்

மேலும் விரைவில் பல இடங்கள்.

உங்கள் தேவை எங்கள் சேவை

UK +44 (0)207 118 0550
SL +94 114 444 111

Available on the App Store
ANDROID APP ON Google play

info@orderfood.lk
/orderfood
/orderfoodlk

நல்ல சோறு சாப்பிடவேண்டுமா AMIRTAA அரிசி வாங்குங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12 வருடத்திற்கு ஒருமுறை நடைபெறும் மஹாமகம் குளத்தில் பக்தர்கள் நீராடும் காட்சி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவம் விளையாட்டாய்ப் போனதுவோ?

லண்டன் சைவக் கோயில்கள் ஒன்றியத்தின் சார்பில், ஆண்டுதோறும் சைவ மாநாடு நடத்தப்பட்டு வருகிறது. எந்த ஒரு மாநாடும் ஏதேனும் ஒரு நோக்கத்தை உள்ளடக்கியே நடத்தப்படும். அதோடு, அந்த நோக்கத்தைச் செயல்படுத்துவதற்கான வழி வகைகளை ஆராய்வது, திட்டங்களை வகுப்பது என்கிற ரீதியில் அந்த மாநாட்டின் நிகழ்ச்சி நிரல்கள் அமைந்திருக்கும். மாநாட்டின் நோக்கத்திற்கு வலு சேர்க்கின்ற வகையில், அது தொடர்பான துறைகள் சார்ந்த அறிஞர் பெருமக்கள் அழைக்கப்பட்டு, அவர்களின் வழிகாட்டுதல்களும், அறிவுரைகளும் பெறப்படும். இதுவே மாநாடு நடத்துவதன் அடிப்படை நியதியாக இருந்து வருகிறது.

ஆனால், லண்டன் சைவக் கோயில்கள் ஒன்றியத்தார் நடத்தும் மாநாடுகளோ, வெறும் பொழுதுபோக்காகவும், கேலிக்கூத்தாகவுமே இருப்பதைப் பார்க்க முடிகிறது. இதோ இந்த ஆண்டிற்கான மாநாடு, மார்ச் மாத இறுதியில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த சைவ மாநாட்டின் சிறப்பு நிகழ்ச்சி என்ன தெரியுமா? திரைப்படப் பின்னணிப் பாடகர் உன்னிகிருஷ்ணனின் பாட்டுக்கச்சேரி... எப்படி இருக்கிறது பாருங்கள் இவர்கள் சைவத்தை வளர்க்கும் லட்சணம்!

ஏற்கனவே, புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்களிடம், குறிப்பாக இளைய பிள்ளைகளிடம் இருந்து சிறிது சிறிதாக சைவம் அந்நியப்பட்டு வரும் நிலையில், கோயில் நிர்வாகத்தாரே இப்படிப் பொறுப்பின்றி நடந்து கொள்ளலாமா? திருவிழாக்கள், வழிபாட்டு முறைகள் என எல்லாவற்றிலும் தன்னிச்சையாக சைவ விதிகளுக்கு மாறாக செயல்படுவது போதாதென்று, சைவ மாநாட்டையும், பொழுதுபோக்குக் கச்சேரியாக்கும் இவர்களை சைவம் வளர்த்த பெருமக்கள் ஒரு போதும் மன்னிக்கவிட்டார்கள்.

“நமச்சிவாயா வாழ்க, நாதந்தாழ் வாழ்க” என அழகிய தமிழில் திருமுறைகள் கணீரென்று ஒலித்து சைவத்தின் பெருமையை நிலைநாட்ட வேண்டிய மாநாட்டில், திரைப்படப் பாடல்கள் அவை பக்திப்பாடல்களாகவே இருந்தாலும் ஒலிப்பது முறையா என்பதை சைவக் கோயில் ஒன்றியத்தார் சிந்திக்க வேண்டும்?

அப்பரும், சுந்தரரும், நாவுக்கரசரும் கால்கடுக்க நாடு முழுவதும் சுற்றித்திரிந்து, அழகு தமிழில் பாடல்கள் பாடி வளர்த்த சைவத்தை, தாங்கள் சைவ மரபினர் என்று சொல்லிக்கொள்ளும், ஈழத்தமிழர்கள் அழித்தார்கள் என்று நாளைய வரலாறு நம்மைப் பழிக்காதா?


இனியாவது தெளிந்த சிந்தனையுடன், பெரியோர்களின் அறிவுரைகளைக் கேட்டு, அவர்களின் வழிகாட்டுதல்களைப் பெற்றுச் செயல்படுத்துங்கள் எனத் தமிழர் தகவல் கேட்டுக்கொள்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சுகி. சிவம்

# மனித குலத்தின் சாபங்கள்



ஒருவரை இன்னொருவருடன் ஒப்பிட்டு உயர்வு தாழ்வு கற்பிப்பது மானுட நோய். மரபுவழிப் பிழை, இதனால் தான் சிலருக்குத் திமிரும் சிலருக்குத் தாழ்வு மனமும் உண்டாகி உலகம் நகரமானது. முட்டாள் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளைப் பிற குழந்தைகளுடன் ஒப்பிட்டு மன ஊனம் ஏற்படுத்தி விடுகிறார்கள்.

படைப்பின் அற்புதமே அதன் பன்முகம், விதவிதமான நிறங்கள் வடிவங்கள் என்ற கற்பனை ஆவேசமே கடவுள் லீலை. ஒரு பல்லியினத்திலேயே எத்தனை எத்தனை பல்லிகள், மாக்கலர், வெள்ளை, சாம்பல் மற்றும் விதவிதமான புள்ளிகள். ரேகைகள்... புத்தர் போல் ஒரே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறமான நிர்மலமான பல்லிகள். ஆஹா... நல்லியில் டிசைன் இருப்பது நியாயம்.. பல்லியில் ஏன் இத்தனை டிசைன்? ஒரே பதில் இயற்கைக்கு இரசனை அதிகம்! வேறுபாடுகளில் தான் அதன் அசாத்தியப் பலம் ஒளிந்திருக்கிறது. பாரதி கூறியது போல் படைப்பு ஒரு வர்ணக் களஞ் சியம். இதில் உயர்வு தாழ்வு சொல்வது கடவுள் முகத்தில் கரிபூசும் வேலை.

ஒரு மறுவாசிப்பில் முன்பு படித்துச் சிலாகித்த பாடலை இப்போது மனம் மறுதலிக்கிறது அறிவுக்களஞ்சியமாக அறியப்படும் அவ்வைப் பாட்டியைக் கூண்டில் நிறுத்தி நறுக்கென்று நாலுகேள்வி கேட்க நாவு துறுதுறுக்கிறது. நீதி நூல் மூலம் அநீதி நடந்துவிட்டது. அவ்வைக்கு மயில் அழகாகத் தெரிந்தது சரி. வான்கோழியை அசிங்கம் என்பதா? அதன் சிறகைப் பொல்லாச் சிறகு என்று பாட்டி ஏன் அவமானப்படுத்த வேண்டும்? கானமயிலாடக் கண்டிருந்த வான்கோழி தானும் அதுவாகப் பாவித்துத் தானுமதன் பொல்லாச் சிறகை விரித்து ஆடினால் போலும் என்று பாடலாமா? படைப்பின் விரித்து ஆடினால் போலும் என்று பாடலாமா? படைப்பின் ஒரு முகம் மயில்.

இன்னொரு முகம் வான்கோழி. மயிலுக்குப் பட்டம் கட்ட வான்கோழியை மட்டம் தட்ட வேண்டுமா என்ன? காக்கைக்குத் தன் குஞ்சு பொன் குஞ்சு என்ற மாதிரி வான்கோழிக்கு அதன் இறகு பெருமிதம் தானே? அதைப் பொல்லாச் சிறகு என்று அவமானப்படுத்தலாமா?

தானும் அதுவாகப் பாவித்து என்பது மனிதமன வக்கிரம், மயிலோடு போட்டி போட எந்த வான்கோழியும் மடத்தனமாக முயல்வதில்லை. பாட்டிக்கும் இது தெரியும். பின் ஏன் இந்த வஞ்சம். அதன் தோகை விரிப்பு தன் காதல் துணைக்கான வலைவீச்சு, விரக வெப்பம் தணிக்க வீசும் விசித்திர விசிறி அது. அவ்வை அசிங்க





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மென்ற பொலாச் சிறகின் வனப்பும் வசீகரமும் அதன் காதல் துணைக்கு மட்டும்தான் தெரியும். படைப்பு இன விருத்திக்காகப் புனைந்திருக்கும் ஏற்பாட்டை உவமைக்காகக் கூட நாம் குறைத்துவிடக் கூடாது.

**'கல்லாதான் கற்றகவி' என்று கல்லாதவன் கற்றவனுக்கு நிகராகக் கவி பாடியது**

'கல்லாதான் கற்றகவி' என்று கல்லாதவன் கற்றவனுக்கு நிகராகக் கவி பாடியது. கவிஞர் அவ்வைக்குப் பிடிக்காமல் போனது சரிதான். உவமைக்காக வான்கோழி மயிலோடு போட்டி போடுவதாகக் கற்பிப்பது சரியாகாது. போட்டி பொறாமை ஒப்பீடு இவை மனித குலத்தின் சாபங்கள். மயிலின் சிறகு விரிப்பு பெண்மயிலைக் கவர, வான்கோழியின் ஆலவட்டம் தன் துணையைக் கவர, வான்கோழி பெண்மயிலைக் கவர ஒருபோதும் முயன்றதில்லை. மனிதனுக்குத் தான் இந்த முறையற்ற பால் கவர்ச்சியில் மோகமுண்டு.

வெள்ளைக்காரர்கள் கறுப்பர்களை அவமானப்படுத்தி அதிகக் கொடுமைப் படுத்தியமைக்குக் காரணமே, வெள்ளைக்காரப் பெண்களுக்குக் கறுப்பின ஆண்கள் மீதிருந்த அலாதிக் கவர்ச்சிக்குப் பழிவாங்கும் வெறிதான் என்றொரு கருத்து உண்டு. வான்கோழிகள் மேலானவை. அவை மயில்களை இணை சேர ஒரு போதும் அழைப்பு விடுவதில்லை.

திருவாரூர் பிள்ளையாருக்குப் பொல்லாப் பிள்ளையார் என்று பெயருண்டு. அங்கு 'பொல்லா' என்ற சொல் சிறப்புச் சேர்க்கிறது. அப்படிச் சிறகுக்குச் சிறப்பு செய்திருப்பாளோ அவ்வை. ம்ஹஂூட, பாட்டிக்கு வான்கோழி மீது எள்ளல் இருக்கிறது. தமிழுக்கே பெருமையான ஆதி அவ்வையைக் குறை சொல்வதா என்று யாரும் கோபப்பட வேண்டாம். அவ்வை என்ற பெயரில் ஏழு கிழவிகள் புலவர்களாக இருந்திருக்கிறார்கள். இந்த அம்மாள் பிற்காலப் பெண்மணி. போர்த்துக்கீசியர்கள் இந்தியா வந்தபோது வந்த பறவை வான்கோழி. அது மட்டுமல்ல. ஆங்கிலேயர்கள் கிங்சிக்குப் பாட்டுப் போட்டதைப் பார்த்துத்தான் அனா ஆவன்னாவுக்கு இந்த அம்மாள் பாட்டுக் கட்டினார். பேராசிரியர் தாயம்மாள் அறவாணன் அவ்வை பற்றி அருமையாக ஆராய்ச்சி செய்திருக்கிறார். மனிதர்களுக்குத் தங்கள் குணக்கேட்டை விலங்குகள் மீது ஏற்றுவது வாடிக்கை. புலியைப் பார்த்துப் பூனை சூடுபோட்ட மாதிரி என்பார்கள். எந்தப் பூனையும் புலியைப் போட்டியாகக் கருதாது. சூடும்போடாது. மனிதர்கள் வஞ்சகர்கள், என்னளவில் வாழ்க்கையில் எல்லாமே மறுபரிசீலனைக்குரியது. எவருமே விமர்சனத்திற்கு அப்பாற்பட்டவர்கள் இல்லை. பிரபஞ்ச சாகரத்தின் ஓர் அலை மயில். இன்னொரு அலை வான்கோழி. இதில் ஒப்பீடுகளும் அவமானமும் நல்லதல்ல. பொல்லாச் சிறகு என்ற வரிகள் படைப்பை அவமானப்படுத்தும் மனிதப் பார்வை. சிறகின் அழகைத் தீர்மானிக்க வேண்டியவர் இன்னொரு வான்கோழியே ஒழியக் கிழவி அல்ல. □



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஜோதிட நூல் ஆசிரியர் A. பிரகஸ்பதி
M.A., B.AL.
மேடவாக்கம், சென்னை,
செல் : (91) 9840550602, (91) 9952981683

# செவ்வாய் தோஷம் நாகதோஷம் விதியா? தேவையில்லை?

ஒரு பெண் (அ) ஆண் ஜாதகத்தில் 2, 4, 7, 8, 12 ஆகிய இடங்களில் செவ்வாய் இருந்தால் செவ்வாய் தோஷம் என்றும், 1, 2, 5, 7, 8 ஆம் இடங்களில் ராகு (அ) கேது இருந்தால் நாகதோஷம் என்றும் கூறுவது உண்டு. இதன் காரணமாக, அந்த ஜாதகர் (அ) ஜாதகியின் மனைவி (அ) கணவரின் உயிருக்கு ஆபத்து உண்டாகும் என்பது பொதுவான கருத்தாகும். சிலரது வாழ்வில் அடிக்கடி சண்டை சச்சரவுகள் ஏற்பட்டு, பிரிவினை ஏற்படும் என்பதும் ஓரளவு உண்மையாகும்.

ஆனால், ஒரு ஜாதகத்தில் மேற்கூறியவாறு செவ்வாய் தோஷம் (அ) நாகதோஷம் இருந்தாலும் அந்த ஜாதகத்தில் செவ்வாய் (அ) ராகு தனது ஆட்சி, உச்ச வீடுகளில் இருந்தாலும், (அ) மேற்கூறிய கிரகங்களை குரு சுக்கிரன் பார்த்தாலும் இந்தத் தோஷமிரண்டும் விலகிவிடும்.

செவ்வாய் (அ) ராகுவுடன் குரு, சுக்கிரன், புதன் முதலானோர் கூடியிருந்தாலும் மேற்கூறிய தோஷம் இரண்டும் விலகி விடும் என அறியவும். இந்த மாதிரியான அமைப்புடையோரின் இல்வாழ்க்கை சந்தோஷமாக இருக்கும். கணவன்-மனைவி ஆகிய இருவரும் தீர்க்காயுசுடன் சிறப்பாக வாழ்வார்கள் எனலாம்.

மேற்கூறியவாறு செவ்வாய் தோஷம் (அ) நாகதோஷமிருந்தாலும் இவர்களுக்கு சுபர் பார்வை (அ) சம்பந்தம் இல்லாதிருந்தாலும், இந்தச் செவ்வாய் (அ) ராகு யோக பலத்தில் ஓங்கி, இராஜயோக அம்சத்துடன் வலமாக இருந்தாலும் மேற்கூறிய தோஷமிரண்டும் விலகிவிடும் என அறியவும்.

மேற்கூறிய செவ்வாய் (அ) ராகு 7-8ஆம் மிடங்களில் அமர்ந்து, சூரியன், சனி போன்ற பாவிகளுடன் கூடியிருந்தால், மேற்கூறிய தோஷமிரண்டும் அதிகரித்து இவ்வாழ்வில் பலவிதமான சிக்கல்களும், பிரிவினையும், மாங்கல்ய தோஷமும் வர இடமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆனால், மேற்கூறியவாறு கிரக நிலைகள் இருந்தாலும், 7ஆம் அதிபதியும், சுக்கிரனும், லக்னாதிபதியும், குருவும் கூடி கேந்திர, கோணங்களில் அமர்ந்து ஆட்சி, உச்சப் பலத்துடன் பலமாக இருந்தால், அந்த ஜாதகரின் சிலவாழ்வில் சிறு, சிறு சண்டை சச்சரவுகள் (அ) மனஸ்தாபங்கள் வந்து உடனடியாக விலகிவிடும்! மற்றபடி, யாருடைய உயிர்க்கும் எந்தவிதமான ஆபத்தும் ஏற்படாது என அறிய வேண்டும்!

எனவே, செவ்வாய் தோஷம், நாகதோஷம் ஒரு ஜாதகத்தில் இருந்தாலும் இவையிரண்டும் மற்றக் கிரக அமைப்புககால் மாறி, நல்ல பலன்கள் தர அதிக வாய்ப்புகள் உள்ளது! - அதாவது, இவற்றைக் கண்டு யாரும் பயப்பட வேண்டாம் என்பது எமது ஆய்வின் முடிவாகும்!


**நவீன 108 நெம்பர் துர்முகி வருஷ**
**திருக்கோயில் அனுஷ்டான வாக்ய பஞ்சாங்கம்**

**2016** **2017**



தமிழ்நாடு
அர்ச்சகர்கள் சமூக
நலச்சங்கத்தின்
அனுமதியுடனும்
ஆதரவுடனும்
வெளியிடப்படுகிறது

ஸூர்ய பகவான்

**இந்த பஞ்சாங்கத்தை லண்டன் கோவில்கள் அறிமுகப்படுத்தினால் வாக்கியப்படி திருவிழாக்கள் நடைபெற வசதியாக இருக்கும் சைவ கோவில்கள் இதை ஏற்பார்களா?**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாட்டுப் பொங்கலன்று நந்திக்கு மரியாதை



அண்ணாமலையார் கோயில் என்றும் திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோயில் என்றும் அறியப்படும் தலமானது சிவபெருமானின் ஐம்பூதத்தலங்களில் ஒன்றான அக்னித் தலமாகும். இத்தலத்தின் மூலவர் அருணாசலேஸ்வரர் என்றும், அம்பிகை உண்ணாமுலையாள் என்றும் அழைக்கப்படுகின்றனர்.

மாட்டுப் பொங்கலன்று இங்குள்ள நந்திக்கு விசேஷ பூஜை நடக்கும். அன்று அனைத்து காய்கறிகள், பழங்கள், இனிப்பு வகைகள், பலகாரங்கள் படைத்து அனைத்துவகை மலர்களும் கோர்க்கப்பட்ட மாலை அணிவித்து, பூஜை செய்வர். அவ்வேளையில் அண்ணாமலையார், நந்தியின் முன் எழுந்தருளி அவருக்கு காட்சி தருவார். தனது வாகனத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கும் விதமாக சிவன் இவ்வாறு எழுந்தருளுகிறார்.



பத்மினி சிவானந்த ஜோதியின் பிறந்தநாளைக்கு திருவண்ணாமலையில் திரு. திருமதி சுகி.சிவம் தம்பதிகள் கலந்து கொண்டு வாழ்த்துகிறார்கள். உடன் இருப்பவர்கள் படத்தில் திருவண்ணாமலை மடம் காளிசாமியும்-உதவியாளர் குப்பம்மாவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**9.40ல் இருந்து 11 மணிக்குள் ராமேஸ்வரம் ராமநாதசாமி கோவிலில்**

நாளை (புதன்கிழமை) காலை 9.40 மணியில் இருந்து 11 மணிக்குள் கும்பாபிஷேகம் நடைபெறும். அப்போது மூலவர் விமானம் மற்றும் ஆலய கோபுரங்களில் உள்ள கலசங்களில் திருக்குட நன்னீராட்டு நடைபெறும்.

அகில இந்திய புண்ணிய தலங்களில் ஒன்றாகவும், இந்தியா முழுவதும் உள்ள 12 ஜோதிர் லிங்கங்களில் ஒன்றாகவும் விளங்கும் ராமேசுவரம் ராமநாதசாமி கோவில் கும்பாபிஷேகம் 15 ஆண்டுகளுக்கு பிறகு நாளை (புதன்கிழமை) நடக்க உள்ளது.

இதையொட்டி கோவிலில் உள்ள 126அடி உயரமும் 9 நிலைகளும் கொண்ட கிழக்கு ராஜகோபுரமும், 76 அடி உயரமும் 5 நிலைகளும் கொண்ட மேற்கு கோபுரமும் 2 நன்கொடையாளர்கள் மூலம் ரூ. 37 லட்சம் மதிப்பில் திருப்பணிகள் முடிந்து புதுப்பொலிவுடன் தயார் நிலையில் உள்ளன. இதுதவிர சுமார் 500 ஆண்டுகளாக மன்னர்கள் காலத்தில் இருந்து மொட்டை கோபுரங்களாக காட்சியளித்து வந்த ராமேசுவரம் கோவிலின் வடக்கு, தெற்கு கோபுரங்களில் 2 நன்கொடையாளர்கள் மூலம் ரூ. 3.5 கோடி மதிப்பில் நடந்து வரும் திருப்பணிகளும் முடிந்துள்ளது.

இந்த திருப்பணிகளுக்காக மொத்தம் ரூ. 8 கோடி செலவிடப்பட்டுள்ளது. இதன் மூலம் ராமேஸ்வரம் ஆலயம் புத்தம் புதிதாக, புதிய தோற்றத்துடன் மாறியுள்ளது. கும்பாபிஷேகத்துக்கான அனைத்து ஏற்பாடுகளையும் கோவிலின் இணை ஆணையர் செல்வராஜ் மற்றும் கோவில் ஊழியர்கள் செய்துள்ளனர்.

தல வரலாறு

ராமேஸ்வரம் ராமநாதசுவாமி கோவில் தமிழ்நாட்டு மக்களை மட்டுமின்றி, வெளிநாட்டவரையும் கவரத்தக்க வகையில் பண்டைகால திராவிட கலாசாரத்தை எடுத்துக் காட்டும் வகையில் சிறப்பாக அமைந்துள்ளது. ராமபிரான் ராவணனை சம்ஹாரம் செய்த காரணத்தால் அவருக்கு பிரம்மஹத்தி தோஷம் ஏற்பட்டது. அந்த பிரம்மஹத்தி தோஷம் நீங்க அகத்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனிவரின் ஆலோசனைப்படி ராமர், ராமேஸ்வரம் வந்து சிவலிங்கத்தை பூஜை செய்து வழிபட்டால் பிரம்ம ஹத்தி தோஷம் நீங்குமென்று கூறினார்.

உடனே, ராமர் ஆஞ்சநேயரிடம் கைலாச பர்வதத்திற்குச் சென்று சிவலிங்கம் கொண்டு வரும்படி கட்டளையிட்டார். அதன்படி ஆஞ்சநேயர் கைலாசபர்வதத்திற்குச் சென்றார். லிங்கத்தை கொண்டு வர சற்று தாமதமானதும் சீதாபிராட்டி விளையாட்டாக மண்ணை கையில் பிடித்து சிவலிங்கம் ஒன்றை செய்தார்.

குறித்த ஒரு லக்கின நேரத்தில் சிவலிங்கத்தை பிரதிஷ்டை செய்ய தாமதம் ஆகலாம். ஆஞ்சநேயர் வருவதற்குள் செய்ய வேண்டி இருந்த காரணத்தால் சீதாதேவி மணலால் பிடித்து வைத்திருந்த சிவலிங்கத்தை பிரதிஷ்டை செய்து பூஜையை தொடங்க அகத்திய முனிவர் குறித்த நல்ல நேரம் முடிவதற்குள் இந்த லிங்கத்தை பிரதிஷ்டை செய்ய உத்தரவிட்டார். பிறகு கொண்டு வந்த ஆஞ்சநேயர் தான் வருவதற்குள் இங்கு மணலால் லிங்கத்தை பூஜை செய்வதைக் கண்ட அவர் கோபமுற்று அது விஷயமாக கேட்க ஸ்ரீராமபிரானானவர் அந்த லிங்கத்தை அகற்றிவிட்டு நீ கொண்டு வந்த லிங்கத்தை வை என்று உத்தரவிட்டார்.

அதை கேட்ட அனுமன் தன் வாலினால் சுழற்றி அந்த லிங்கத்தை அகற்ற முயற்சி செய்து, அம்முயற்சியில் தோல்வியுற்று, தன் வால் அறுந்து விழுந்து மயக்கமடைந்தார்.

பின்னர் ராமபிரானாரால் எழுப்பப்பட்டு, அனுமன் கொண்டு வந்த லிங்கத்தை பிரதிஷ்டை செய்து அதற்கே முதலில் பூஜை செய்யப்படும் என்று உறுதி அளித்தார். பின்னர் தாங்கள் பிரதிஷ்டை செய்த லிங்கத்திற்கு பூஜை நடைபெறும் என்று சொன்னார். இவ்வாறு ராமபிரானால் பிரதிஷ்டை செய்யப்பட்டதால் அன்று முதல் ராமனால் உண்டாக்கப்பட்ட ஈசனை உடைய ஊர் என்ற பொருள் கொண்ட ராமேஸ்வரம் என்ற பெயர் பெற்றது.

இத்தலமானது மூர்த்தி ஸ்தலம், தீர்த்தம் என்ற மூன்றுக்கும் கீர்த்தி வாய்ந்தது. இத்தலத்தில் உள்ள சுவாமிகள் ராமேஸ்வரர் ராமலிங்கேசுவரர், ராமநாதர் என்ற பல பெயர்களாலும் அழைக்கப்படுகிறார்.

இந்த ஆலயமானது வட மாநில மக்களை மிகவும் கவர்ந்துள்ளது. வடநாட்டவர்கள் காசியில் உள்ள விசுவநாதருக்கு கங்கை நீரால் அபிஷேகம் செய்து பூஜை செய்து, அங்கிருந்து கங்கை ஜலத்துடன் ராமேஸ்வரம் ராமனாத சுவாமிக்கு அபிஷேகம் செய்து, தங்கள் யாத்திரையை பூர்த்தி செய்து கொள்கிறார்கள்.

அதேபோல் தமிழ்நாட்டில் இருந்து காசிக்கு செல்ல இருப்பவர்கள் முதலில் ராமேஸ்வரத்திற்கு சென்று இங்குள்ள புனித தீர்த்தங்களில் நீராடி இறைவனை வழிபடுவதுடன் இங்கிருந்து மணல் எடுத்து அதற்கு பூஜை செய்து அதை எடுத்துக் கொண்டு போய் பிரயாகை திரிவேணி சங்கமம் என்ற இடத்தில் போட்டுவிட்டு காசி விசுவநாதரை தரிசனம் செய்துவிட்டு, அங்கிருந்து கங்கை ஜலத்தை கொணர்ந்து ராமநாதசுவாமி அபிஷேகம் செய்து வழிபடுவதுடன் தங்களுடைய காசி, ராமேஸ்வரம் யாத்திரையை பூர்த்தி செய்வர்.

இதன் மூலம் இவ்வூரின் பெருமையால், இது அனைத்திந்திய மக்களை ஒன்றாக இணைத்து நமது தேசிய ஒருமைப்பாட்டுக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

குழந்தை பாக்கியம் இல்லாதவர்கள், இங்கு வந்து இங்குள்ள புனித தீர்த்தங்களில் நீராடி, சர்ப்ப சாந்தி, நாக பிரதிஷ்ட முதலியவை செய்து சுவாமி தரிசனம் செய்தால் மக்கள் செல்வம் ஏற்படும் என்ற நம்பிக்கை நம் மக்களிடம் உண்டு.

□




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முக்கிய சன்னதிகள்

ராமேஸ்வரம் கோவிலில் உள்ள முக்கிய சன்னதிகள் வருமாறு :

1. ராமநாதர் சன்னதி, 2. விசுவநாதர் சன்னதி, 3. விசாலாட்சி சன்னதி, 4. உத்வை மூர்த்திகள், 5. பர்வதவர்த்தினி அம்பாள் சன்னதி, 6. சந்தான கணபதி, 7. பள்ளி கொண்ட பெருமாள், 8. பள்ளியறை, 9. மகா கணபதி சன்னதி, 10. சுப்பிரமிணயர் சன்னதி, 11. நவக்கிரகம், 12. நடராஜ சன்னதி, 13. மகாலட்சுமி சன்னதி, 14. ஆஞ்சநேயர் சன்னதி, 15. மேல கோபுர வாசல் விநாயகர் சன்னதி, 16. மேலவாசல் முருகன் சன்னதி (பாம்பன் சுவாமிகளுக்கு அருள்புரிந்தவர், மிகவும் சக்தி வாய்ந்த தெய்வம்). 17. சேது மாதவ சன்னதி.



# உ வித கதைகள்

ராமேஸ்வரம் தலத்து கோவிலின் தோற்றம் குறித்து இரண்டு கருத்துக்கள் நிலவுகின்றன. ராமாயணப் போருக்கு முன்னர் சேது அணை கட்டுவதற்காக ராமபிரான் இக்கோவிலை எழுப்பினார் என்பது ஒரு கருத்து. ராமாயண போருக்கு பின்னர் ராவணனைக் கொன்று பாவம் நீங்க வேண்டி ராமபிரான் இக்கோவிலை எழுப்பினார் என்பது மற்றொரு கருத்து.

ராவணனால் இலங்கைக்கு கவர்ந்து செல்லப்பட்ட சீதாதேவியை காக்கும் பொருட்டு, ராமபிரான் தமது படைகளுடன் கடலிலே பாலம் கட்டத் தொடங்கினார். அவர் பகலிலே கட்டிய பாலத்தை ராவணன் இரவிலே வந்து அழித்துவிட்டான்.

அதை கண்ட ஜாம்பவான் ராமபிரானிடம் பாலத்தை கட்டி அதன் மீது சிவலிங்க உருவை வைக்குமாறு கூறினார். ராமபிரானும் அவ்வாறே சிவலிங்க பிரதிட்டை செய்தார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சிவபக்தனான ராவணன், அச்சிவலிங்க உருவம் கண்டதும் பாலத்தை அழிக்காது விட்டுவிட்டான். இவ்வாறு தோன்றியது தான் இத்தலத்து ராமலிங்கம் என்பது ஒரு கருத்தின் விளக்கம். இது ராமாயணப் போருக்கு முன்னது.

ராமயண போருக்கு பின்னர் ராமபிரான் சிவலிங்க பிரதிட்டைக்காக ஒரு நேரம் குறிப்பிட்டு அனுமனை சிவலிங்கம் கொண்டு செல்லுமாறு காசிக்கு அனுப்ப குறிப்பிட்ட நேரத்தில் அவன் வந்து சேர்ந்ததால் சீதாதேவி கடற்கரையிலுள்ள மணலையே சிவலிங்கமாக்கி கொடுத்தாள். அச்சிவலிங்கத்தை ராமபிரான் குறிப்பிட்ட நேரத்தில் பிரதிஷ்டை செய்து பூசையை முடித்தார்.

காலங்கடந்து வந்த அனுமன் அதை கண்டு கோபமுற்று பிரதிட்டை செய்யப்பட்டிருந்த சிவலிங்கத்தை தனது வாலால் கட்டி பெயர்த்தெடுக்க முயன்று முடியாமல் நின்றான். அதை கண்ட ராமபிரான் அவ்வனுமனை சமாதானப்படுத்தி அவன் கொண்டு வந்த சிவலிங்கத்தை ராமலிங்க பிரதிட்டையின் அருகிலேயே பிரதிட்டை செய்து வைத்து அதற்கே முதற்பூசை நடைபெற வேண்டும் என்ற கட்டளையும் இட்டார். அனுமன் கொண்டு வந்த சிவலிங்கம், ராமலிங்கத்திற்கு வட பக்கம் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு தோன்றியது தான் இத்தலத்து ராமலிங்கம் என்பது மற்றொரு கருத்தின் விளக்கம். சிவபுராணம், ஆஞ்சநேய புராணம், பத்ம புராணம், அத்யாத்ம ராமாயணம், ஆனந்த ராமாயணம் ஆகியவையெல்லாம் இத்தலத்து தோல்வி ராமாயண போருக்கு முன்னரே எழுப்பப்பட்டது என்னும் கருத்தை உணர்த்துகின்றன. ராமபிரான் இலங்கையிலிருந்து மலர் விமானத்தில் திரும்பும்போது தாம் அமைத்த அணையையும், கோவிலையும் சீதாதேவிக்கு காட்டியதாக கூறுகின்றன.

கந்தபுராணம், கம்பராமாயணம், தேவாரம் ஆகிய நூல்கள், ராமாயண போருக்கு பின்னர் ராவணனை கொன்ற பாவம் தீர, ராமபிரான் இக்கோவிலை எழுப்பினார் என்று தெளிவாக கூறுகின்றன. வால்மீகி ராமாயணம் இத்தலத்து கோவிலை பற்றி கூறவில்லை. ஆனால் ராமபிரான் இலங்கையிலிருந்து மலர் விமானத்தில் அயோத்தியை நோக்கி திரும்பி செல்லும் போது தம்மால் கட்டப்பட்ட சேது அணையை சீதாதேவிக்கு காட்டியதையும், சேதுவின் சிறப்பையும், தமக்கு மகாதேவர் அருள் வழங்கிய காட்சியையும் சுருக்கமாக கூறுகின்றது.

கம்பராமாயணம், அனுமன் காசிக்கு சென்றதையும், சீதாதேவி மணலிலே கட்டிய சிவலிங்கத்தை ராமபிரான் பிரதிட்டை செய்ததையும் விரிவாக கூறுகின்றது.

இத்தலத்து கோவில் ராமபிரானால் எழுப்பப்பட்டது என்பதை திருஞான சம்பந்த சுவாமிகள்,

"தேவியை வவ்விய தென்னிலங்கைத்
தசமாமுகன்
பூவியலும் முடிபொன்று வித்த
பழியோய்அற
ஏவியலும் சிலை அண்ணல் செய்த
இராமேச்சுரம்"

எனப்பாடிப் போற்றுகின்றார்.

ஞானசம்பந்தர், ராமாயணப் போருக்கு பின்னர், ராவணனை கொன்ற பாவம் நீங்கவே ராமபிரான் கோவில் எழுப்பினார் என்னும் கருத்தை விளக்குகின்றார். திருநாவுக்கரசு சுவாமிகள்.

"செங்கண்மால் செய்த கோவில்
திரு இராமேச்சுரம்"

என்று இத்தலத்தை போற்றிப் பாடுகின்றார். ராமபிரான் எடுத்த கோவில் என்பதனை உணர்த்துகின்றார்.

ராமேசுவரம் தீவு, திருமாலின் கையில் இருக்கும் சங்கின் வடிவில் அமைந்து விளங்குகிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோவிலில் உள்ள 22 தீர்த்தங்கள்

தலப்பெருமையும், மூர்த்தி மகிமையும் கொண்டு விளங்குகின்ற ராமேசுவரத்தலம், தீர்த்த விசேஷத்தையே முதன்மையாகக் கொண்டு விளங்குகின்றது. இத்தலத்தில் மொத்தம் 64 தீர்த்தங்கள் இருப்பதாகக் கூறப்படுகின்றது.

சில நூல்களில், 56 தீர்த்தங்கள் உள்ளன என்று கூறப்படுகின்றது. "சேது புராணம்" என்னும் தல புராணமும், "தேவையுலா" என்னும் நூலும் 22 தீர்த்தங்களை மிகச் சிறந்தவையாகக் கூறுகின்றன.



1. மகாலட்சுமி தீர்த்தம்

இத்தீர்த்தம், கோயிலின் கிழக்குக் கோபுரத்தின் அருகில், அனுமான் கோயிலுக்குத் தெற்கே உள்ளது. இங்கு நீராடினால் சகல செல்வங்களை பெறலாம்.

2. சாவித்திரி தீர்த்தம், 3. காயத்ரி தீர்த்தம், 4. சரஸ்வதி தீர்த்தம்

இம்மூன்று தீர்த்தங்களும் அனுமார் கோவிலுக்கு மேல்புறம் உள்ளது. இம்மூன்று தீர்த்தங்களில் ஸ்னானம் செய்வதால் மத சடங்குகளை விட்டவர் சந்ததியில்லாதவர் இஷ்ட சித்தி அடையலாம்.

5. சேது மாதவ தீர்த்தம்

இது மூன்றாம் பிரகாரத்தின் மேற்கு பகுதியில் உள்ள தெப்பக்குளம். இதில் ராமபிரானால் சகல லட்சமி விலாசமும், சித்த சக்தியும் பெறலாம்.

6. நள தீர்த்தம்

மூன்றாம் பிரகாம் மேற்கு பகுதியில் உள்ள சேது மாதவர் சன்னதிக்கு தென்புறம் உள்ளது. இதில் நீராடுவதால் சீரிய தேஜசை அடைந்து சொர்க்கலோக பதவி அடைவர்.

7. நீல தீர்த்தம்

மூன்றாம் பிரகாரம் மேற்கு பகுதியில் உள்ள சேது மாதவர் சன்னதிக்கு வடபுறம் உள்ளது. இதில் நீராடுவதால் எல்லா பலனையும் அடைந்து சொர்க்கலோக பதவி அடைவர்.

8. கவாய தீர்த்தம்

இது மூன்றாம் பிரகாரம் சேது மாதவர் சன்னதியின் முன்புறம் உள்ளது. இதில் நீராடுவதால் மனைவலிமை, தேக ஆரோக்கியம் கிடைக்கும்.

9. கவாட்ச தீர்த்தம்

இது மூன்றாம் பிரகாரம் சேது மாதவர் சன்னதியின் முன்புறம் சுவாய தீர்த்தத்திற்கு அருகில் உள்ளது. இதில் நீராடுவதால் நரகத்திற்கு செல்ல மாட்டார்கள். மன வலிமை, தேக ஆரோக்கியம், திட சரீரம் கிடைக்கும்.

10. கந்தமாதன தீர்த்தம்

சேது மாதவர் சன்னதியின் முன்பகுதியில் கவாய், கவாட்ச தீர்த்தங்களுக்கு அருகில் உள்ளது. இதில் நீராடுவதால் மகாதரிசத்திரம் நீங்கி ஐஸ்வர்ய சித்தி பெறுவர்.

11. சங்கு தீர்த்தம்

ராமநாதசுவாமி கோவில் பிரதான வாசல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உட்புறம் தெற்கு பக்கத்தில் இரண்டாம் பிரகாரத்தில் இந்த தீர்த்தம் உள்ளது. இதில் நீராடுவதால் செய்நன்றி மறந்த சாபம் நீங்கப் பெறும்.

12. சக்கர தீர்த்தம்

ராமநாதசுவாமி கோவில் பிரதான வாசல் உட்புறம் உள்ள இரண்டாம் பிரகாரத்தில் வடபுறம் உள்ள கருவூலத்தின் கீழ்புறம் உள்ளது. இதில் நீராடுவதால் ஊனம், குருடு, செவிடு ஆகியவை நீங்கி சவுபாக்கியம் அடைவர்.

13. பிரம்மாத்திர விமோசன தீர்த்தம்

இது இரண்டாம் பிரகாரம் வடக்கு பக்கத்தில் பைரவர் சன்னதி அருகில் உள்ளது. இதில் நீராடுவதால் பிரம்மஹத்தி தோஷங்களும், பாவங்களும் நிவர்த்தியாவதுடன், பில்லி, சூனியமும் நீங்கும்.

14. சூர்ய தீர்த்தம்

இது இரண்டாம் பிரகாரத்தில் உள்ள கருவூலத்தில் மேற்கு பக்கம் அமைந்துள்ளது. இத்தீர்த்தத்தில் நீராடுவதால் திரிகாலஞானமும் உண்டாவதுடன் ரோகங்கள் நிவர்த்தியாகும்.

15. சந்திர தீர்த்தம்

இது இரண்டாம் பிரகாரத்தில் உள்ள கருவூலத்தின் மேற்கு பக்கம் உள்ளது. இதில் நீராடுவதால் ரோக நிவர்த்தி அகலும்.

16. கங்கா தீர்த்தம், 17. யமுனா தீர்த்தம்,

18. காயத்ரி தீர்த்தம்

இம்மூன்று தீர்த்தங்களும் திரிக்கோவில் இரண்டாம் பிரகாரத்தில் அமைந்துள்ள கருவூலத்தில் மேற்கு பக்கம் உள்ள சூரியன், சந்திரன் தீர்த்தத்திற்கு எதிரில் அமைந்துள்ளது. இவைகளில் நீராடுவதனால் பிணி, மூப்பு, ஆகியவைகளும் அஞ்ஞானமும் நீங்கி முக்தி அடையலாம்.

19. சாத்தியாமிருத தீர்த்தம்

இத்தீர்த்தம், அம்பிகை திருச்சந்நிதியில் சுக்கிரவார மண்டபத்திற்குத் தென்கிழக்கில் உள்ள கிணறு. புரூரவச்சக்கரவாத்தி இத்தீர்த்தத்தில் நீராடி தும்புரு சாபத்தைப் போக்கிக் கொண்டார்.

20. சிவ தீர்த்தம்

இத்தீர்த்தம், சுவாமி சந்நிதிக்கும் அம்பிகை சந்நிதிக்கும் இடையே அமைந்த அழகிய திருக்குளம். பைரவர் இத்தீர்த்தத்தில் நீராடி பிரமஹத்தி பாவத்தை நீக்கிக் கொண்டார். இதற்கு சிவகங்கைத் தீர்த்தம் என்னும் பெயரும் உண்டு.

21. சர்வ தீர்த்தம்

இத்தீர்த்தம், ராமநாதர் திருச்சந்நிதியில் முதல் பிரகாரத்தில் தென்கிழக்கில் உள்ள கிணறு, சுதரிசனர் என்பவர் இத்தீர்த்தத்தில் நீராடி பிறவிக் குருடும், நரை திரை மூப்பும் நீங்கப் பெற்றார்.

22. கோடி தீர்த்தம்

இத்தீர்த்தம், வடக்கு முதல் பிரகாரத்தில் விசாலாட்சியம்மை சந்நிதிக்கு அருகில் உள்ளது. இதில் எவரும் தாமே நீர் எடுத்து முழுக முடியாது. அதற்கென உள்ளவர் நீர் முகந்து ஊற்றியே பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். இத்தீர்த்தம் பிற தீர்த்தங்கள் அனைத்தையும்விட மேலானது. இத்தீர்த்தத்தில் நீராடிய பிறகு ராமேசுவரத்தில் தங்கியிருத்தல் கூடாது என்பது ஐதிகம். அதனாலேயே இதற்குக் கோடி தீர்த்தம் என்னும் பெயர் உண்டாயிற்று.

இத்தீர்த்தத்து நீரையே மக்கள் கலசங்களில் கொண்டு செல்வது வழக்கம். எவ்வளவு நாட்களானாலும் இந்நீர் கெடுவதில்லை. கிருஷ்ண பகவான் இத்தீர்த்தத்தில் நீராடி கம்சனைக் கொன்ற பாவத்தைப் போக்கிக் கொண்டார். இதில் நீராடியவர் இஷ்ட சித்தியும், ஞான முத்தியும் பெறுவர். □



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முக்கிய தீர்த்தங்கள்

சேது தீர்த்தம் : இத்தீர்த்தம் ராமேசுவரம் தீவின் தென்கிழக்குக் கோடியில் அமைந்துள்ளது. பாம்பன் சந்திப்பிலிருந்து பிரிந்து செல்லும் ரயில் பாதை வழியே 16 மைல் தூரம் சென்று தனுஷ்கோடி நிலையத்தை அடைந்து, அங்கிருந்து கடற்கரையோரமாக இரண்டு மைல் தூரம் நடந்து சென்றால் சேது தீர்த்தத்தை அடையலாம்.

இத்தீர்த்தத்தைப் புனித சேது என்றும், புண்ணிய சேது என்றும், ராமசேது என்றும் மக்கள் வழங்குகின்றனர்.

ராமேசுவரத்திற்குப் போவதற்கு முன் சேதுவில் நீராடியே செல்லுதல் வேண்டும். சேதுவின் ரத்தினாகரத்தில் முதலில் நீராடுவர். இப்புண்ணிய தீர்த்தத்தில் 36 நாட்கள் 36 முழுக்குகள் செய்ய வேண்டும் என்பர். மக்கள் இங்கே பிதுர்க்கடன்களையும் செய்கின்றனர். ஆடி, தை மாத அமாவாசைகளில் இங்குப் பல்லாயிரக்கணக்கான மக்கள் நீராடுகின்றனர்.

அக்னி தீர்த்தம் : ராமநாதர் கோயில் சந்நிதித் தெருவிற்குக் கிழக்கிலுள்ள கடல் அக்னி தீர்த்தம் என்று அழைக்கப்படுகிறது. இக்கடல் தீர்த்தத்திலும் மக்கள் நீராடி பிதுர்க் கடன்களைச் செய்கின்றனர். துட்புண்ணியன் என்பவன் பேயினால் அடைந்த துன்பத்தை இத்தீர்த்தத்தில் நீராடி நீக்கிக் கொண்டான்.

உப்பூர் விநாயகர் சமுத்திரம் : இத்தீர்த்தம், தேவிபட்டினத்திற்கு வடக்கே பத்து மைல் தூரத்தில் உள்ள உப்பூர் என்னும் ஊருக்கு அருகில் உள்ள கடல். இங்கு எழுந்தருளியுள்ள வெயிலுகந்த விநாயகர் மகிவும் விசேடமானவர்.

திருப்பாற் கடல் : இத்தீர்த்தம், உப்பூரிலிருந்து தேவி பட்டினத்துக்குச் செல்லும் வழியில் திருப்பாலக்குடிக்கு அருகில் அமைந்துள்ளது.

தேவி பட்டினம் : இங்குக் கடல் நீரினுள் நவக்கிரகங்கள் உள்ளன. அவை ராமபிரானால் பிரதிட்டை செய்யப்பட்டவை என்று கூறப்படுகின்றது.

சக்கர தீர்த்தம் : இத்தீர்த்தம், தேவி பட்டினத்திலுள்ள திருக்குளம். இங்குக் காலவ முனிவர் தவம் செய்ததாகவும், சக்கரத்தாழ்வார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாப விமோசனம் அடைந்ததாகவும் கூறப்படுகின்றது. இது தரும புட்கரணி.

வேதாளவரத தீர்த்தம் : மண்டபம் இரயில் நிலையத்திலிருந்து வெற்றிலை மண்டபம் என்னும் ஊர் சென்று, அங்கிருந்து இரண்டு கல் தொலைவிலுள்ள வேதாளை என்னும் இடத்தில் இத்தீர்த்தம் உள்ளது. சுதரிசனன் என்னும் கந்தருவன் இத்தீர்த்தத்தில் நீராடி வேதாள உருவத்திலிருந்து நீங்கினான்.

பாபவிநாச தீர்த்தம் : மண்டபம் இரயில் நிலையத்திலிருந்து வெற்றிலை மண்டபம் சென்றால், அங்குள்ள கடலுக்கு அருகே இத்தீர்த்தம் அமைந்துள்ளது. இத்தீர்த்தத்தில் நீராடியவர்கள் எல்லாப் பாவங்களும் நீங்கப் பெறுவார்கள்.

பைரவ, கபி தீர்த்தங்கள் : பாம்பன் ரெயில் நிலையத்திலிருந்து இத்தீர்த்தங்கட்டுச் செல்லுதல் வேண்டும். அரம்பை, கபி தீர்த்தத்தில் நீராடி சாப விமோசனம் பெற்றாள்.

சீதா குண்டம் : கபி தீர்த்தத்திற்குக் கிழக்கே சீதா குண்டம் என்னும் தீர்த்தம் அமைந்துள்ளது. இந்திரன் இத்தீர்த்தத்தில் நீராடி பிரமஹத்தியை நீக்கிக் கொண்டாள்.

மங்கள தீர்த்தம் : தங்கச்சிமடம் சாலைக்குத் தென்புறமாக மங்கள தீர்த்தம் அமைந்துள்ளது.

அமிருதவாபி : இத்தீர்த்தம், தங்கச்சி மடத்துக்கு அருகிலுள்ள ஏகாந்தராமசுவாமி கோயிலுக்குள் இருக்கும் கிணறு.

ரணவிமோசன் தீர்த்தம் : இத்தீர்த்தம், ஏகாந்த ராமசுவாமி கோயிலுக்கு அருகில் வடக்குப் பக்கத்தில் அமைந்துள்ளது. இத்தீர்த்தத்தில் நீராடினால் எல்லா இரணங்களும் நீங்கும்.

வில்லூருணி : இரண விமோசன தீர்த்தத்துக்கு வடக்கே கடற்கரையருகே இத்தீர்த்தம் அமைந்துள்ளது. கடற்கரையருகேயிருந்தாலும் மிகவும் நல்ல தண்ணீர், சீதையின் நீர் வேட்கையைத் தணிப்பதற்காக இராமபிரான் வில்லூன்றி இத்தீர்த்தத்தை ஏற்படுத்தினார்.

லட்சுமண தீர்த்தம் :

இத்தீர்த்தம், ராமேசுவரம் கோயிலுக்கு மேற்கே செல்லும் சாலையில் அரை மைல் தொலைவில் உள்ள திருக்குளம். இலட்சுமணர் சிவலிங்கப் பிரதிட்டை செய்து, திருமஞ்சனம் செய்விப்பதாக ஏற்படுத்திய தீர்த்தம் இது.

ராம தீர்த்தம் : இலட்சுமண தீர்த்தத்திற்குக் கிழக்கே உள்ள திருக்குள தீர்த்தம் இது. இதன் மேல்கரையில் பழமையான இராமர் கோயில் காணப்படுகின்றது.

ஒன்பது தீர்த்தங்கள் : கந்த மாதன பர்வதத்திற்குச் செல்லும் வழியிலும், அதனருகிலும் சுக்கிரீவ தீர்த்தம், அங்கத தீர்த்தம், சாம்பவ தீர்த்தம், தரும தீர்த்தம், பீம தீர்த்தம், அருச்சுன தீர்த்தம், நகுல தீர்த்தம், சகா தேவ தீர்த்தம், திரௌபதி தீர்த்தம் என்னும் ஒன்பது தீர்த்தங்கள் அமைந்துள்ளன.

பிரம தீர்த்தம் : பத்திரகாளி கோயிலுக்குக் கீழ்ப்புறம் பிரம தீர்த்தம் அமைந்துள்ளது.

அனும குண்டம் : திருக்கோயிலின் வெளிவீதிக்கு வடக்கே இத்தீர்த்தம் அமைந்துள்ளது.

அகத்திய தீர்த்தம் : கோயிலுக்கு வெளியே ஈசான திசையில் அக்கினி தீர்த்தத்திற்கு வடக்கே அகத்திய தீர்த்தம் அமைந்துள்ளது.

நாக தீர்த்தம் : ராமேசுவரம் கிழவீதியில், தேவஸ்தான கட்டிடத்தின் பின்புறமுள்ள தோட்டத்தில் நாக தீர்த்தம் அமைந்துள்ளது. கங்கை முதலிய எல்லா தீர்த்தங்களும் தங்கள் பாவங்களைப் போக்கிக் கொள்ள இங்கு உறைவதாகக் கூறப்படுகின்றது.

சடாமகுட தீர்த்தம் : இத்தீர்த்தம், ராமேசுவரத்திற்குக் கிழக்கே தனுஷ்கோடிக்குச் செல்லும் வழியில், கோதண்ட ராமசுவாமி கோயிலுக்கு அருகில் மணல் மேட்டில் உள்ள திருக்குளம், ராம லட்சுமணர்கள் இத்தீர்த்தத்தில் தங்கள் சடை முடியைக் கழுவியதாகக் கூறப்படுகின்றது. □



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோதிலிங்கம்:

சோதிலிங்கம் அல்லது ஜோதிர்லிங்கம் என்பது சிவனை வணங்குவதற்குரிய வடிவங்களுள் ஒன்று. இது ஒளிமயமான லிங்கம் என்னும் பொருள் தருவது. இந்தியாவில் 12 சோதிலிங்கத் திருத்தலங்கள் உள்ளன. திருவாதிரை நட்சத்திர நாளில் சிவன் தன்னை சோதிலிங்க வடிவில் வெளிப்படுத்தியதாக இந்துக்கள் நம்புகிறார்கள். இதனால் திருவாதிரை நாள் சோதிலிங்கத்தை வணங்குவதற்கு உரிய சிறப்பு நாளாகக் கருதப்படுகிறது. பொதுவாக சோதிலிங்கத்துக்கும், பிற லிங்கங்களுக்கும் இடையே எவ்வித தோற்ற வேறுபாடுகளும் தெரிவதில்லை. எனினும், உயர்ந்த ஆன்மீக நிலையை அடைந்தவர்கள் புவியைத் துளைத்துக் கிளம்பும் தீப்பிழம்பாக சோதிலிங்கத்தைக் காண்பார்கள் என்பது நம்பிக்கை.

# தீர்த்தமாடுவதின் பலன்

பக்தர்கள் முதலில் கடலில் அக்னி தீர்த்தம் என்று அழைக்கப்படும் பகுதியில் நீராட வேண்டும். பின்னர் ராமேஸ்வரம் ராமநாதசுவாமி கோவிலில் உள்ள 22 தீர்த்தங்களிலும் பின்வரும் வரிசையில் நீராட வேண்டும். இந்த தீர்த்தங்களில் நீராடினால் ஏற்படும் பலன்கள் பின் வருமாறு :

1. மகாலட்சுமி தீர்த்தம் : ஐஸ்வர்யம் பெருகும்
2. சாவித்திரி தீர்த்தம் : சொல்வளம் பெருகும்
3. காயத்ரி தீர்த்தம் : நன்மைகள் உருவாகும்
4. சரஸ்வதி தீர்த்தம் : கல்வி வளம் பெருகும்
5. சங்கு தீர்த்தம் : வாழ்க்கை வசதி அதிகரிப்பு
6. சக்கர தீர்த்தம் : வைராக்கியம் சித்தம் கிட்டும்
7. சேது மாத தீர்த்தம் : தடைகள் விலகும்
8. நள தீர்த்தம் : சனிப்பீடை ஒழியும்
9. நீல தீர்த்தம் : யாகங்கள் செய்த பலன் கிட்டும்.
10. கவய தீர்த்தம் : மன வலிமை உண்டாகும்
11. கவாட்ச தீர்த்தம் : நோய்கள் நீங்கி உடல் ஆரோக்கியம் பெறும்.
12. கந்தமாதன தீர்த்தம் : அறிவு சிறந்து வல்லமை கிட்டும், வறுமை ஒழியும்
13. பிரம்மஹத்தி விமோசன தீர்த்தம் : தோஷங்கள் போக்கும், பில்லி சூனியத்தால் உண்டான பிரச்சினைகள் விலகும்.
14. கங்கா தீர்த்தம் : புண்ணியம் கிட்டும்
15. யமுனை தீர்த்தம் : பாவ நாசம்
16. கயா தீர்த்தம் : பிறவிப் பயன் கிட்டும்
17. சர்வ தீர்த்தம் : எப்பிறவியிலும் செய்த பாவங்கள் நீங்கும்
18. சிவ தீர்த்தம் : சகல பீடைகளும் ஒழியும்
19. சத்யாமிர்த தீர்த்தம் : ஆயுள் விருத்தியடையும்
20. சந்திர தீர்த்தம் : கல்வி சிறக்கும், கலையார்வம் பெருகும்.
21. சூரிய தீர்த்தம் : ஞானம் கிட்டும்
22. கோடி தீர்த்தம் : முக்தி கிட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பதஞ்சலி முக்திதலம்

பல்லாயிரக்கணக்கான ருத்ராட்சங்கள் சேர்த்து பின்னப்பட்ட ஒரு பந்தலின் கீழ் இத்தலத்துக்கு நடராஜர் காட்சி தருகிறார். இவரது எதிரில் நந்தி இருக்கிறது. நடராஜர் சன்னதியின் பின்புறம் ஒரு சக்கரம் மட்டும் உள்ளது.

இதற்கு தினமும் பூஜை நடக்கும். யோகக் கலையில் தேர்ச்சி பெறவும் நாகதோஷ நிவர்த்திக்காகவும் இந்த சன்னதியில் நம் கண்ணுக்குத் தெரியாமல் நாகவடிவில் மறைந்திருக்கும் பதஞ்சலி முனிவரிடம் வேண்டிக் கொள்ளலாம். பதஞ்சலி முக்தியடைந்த தலம் என்பதால் நம் கண்களுக்கு தெரிய மாட்டார்.

## பாதாள பைரவர்

ராமர் இங்கு சிவபூஜை செய்த போது அவரைப் பிடித்த பிரம்மஹத்தி தோஷம் விலகியது. அந்த தோஷம் எங்கு செல்வதென தெரியாமல் திணறியது. அதனால் வேறு யாருக்கும் பாதிப்பு உண்டாகாமல் இருக்க சிவபெருமான் பைரவரை அனுப்பினார். பைரவர் பிரம்மஹத்தி தோஷத்தை தன் திருவடியால் அழுத்தி பாதாளத்தில் தள்ளினார்.

பின்னர் இத்தலத்திலேயே அமர்ந்து இங்கு வரும் மனம் திருந்திய பக்தர்களின் கொடிய பாவங்களைப் பாதாளத்துக்குள் தள்ளபவராக அருள் செய்கிறார். இவருக்கு பாதாள பைரவர் என்று பெயர். இவரது சன்னதி கோடி தீர்த்தம் அருகில் உள்ளது.

## உப்புலிங்கம்

ஒரு சமயம் இக்கோவில் லிங்கம் மணலால் செய்யப்பட்டதல்ல என்றும் அப்படியிருந்தால் அபிஷேகத்தின் போது கரைந்திருக்க வேண்டும் என்று சிலர் வாதம் செய்தனர். அப்போது பாஸ்கரராயர் என்ற அம்பாள் பக்தர் தண்ணீரில் எளிதில் கரையக்கூடிய உப்பில் ஒரு லிங்கம் செய்து அதற்கு அபிஷேகம் செய்தார். அந்த லிங்கம் கரையவில்லை. அம்பாளை வணங்கும் தன்னால் பிரதிஷ்டை செய்த லிங்கம் கரையாத போது சீதாதேவி பிரதிஷ்டை செய்த லிங்கம் கரையாததில் ஒன்றும் அதிசயமில்லை என்று நிரூபித்தார். ராயர் செய்த உப்பு லிங்கத்தை பிரகாரத்தில் ராமநாதர் சன்னதிக்கு பின்புறம் காணலாம். உப்பின் சொரசொரப்பை அந்த லிங்கத்தைப் பார்த்தாலே உணர முடியும்.





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உலகம் போற்றும் மூன்றாம் பிரகாரம்



ராமேசுவரம் கோவிலில் எத்தனையோ அதிசயங்களும் அற்புதங்களும் புதைந்து கிடக்கின்றன. அதன் ஒவ்வொரு பகுதியிலும் ஒரு வரலாறு உள்ளது.

அவற்றையெல்லாம் நுட்பமாக அணுகிப் பார்த்தால்தான் ராமேசுவரம் கோவிலின் பழமை புனிதமும், ராமநாதரின் அருள் மகிமையும், நமக்கு புரியும். இந்த தலத்தில் ஆகம, ஐதீக விதிகளின்படி வழிபாடு செய்தால் நிச்சயம் உங்கள் வாழ்வில் முன்னேற்றத்துக்கான ஒரு மாறுதல் உருவாகும்.

அடுத்த தடவை நீங்கள் ராமேசுவரம் கோவிலுக்கு செல்லும்போது ஒவ்வொரு பகுதியிலும் நிதானமாக நின்று பார்த்து வாருங்கள். அப்போதுதான் ராமநாதர் ஆலயத்தின் சிறப்பை உணர்வீர்கள்.

ராமேசுவரம் கோவிலில் உள்ள சிறப்புகளில் ஒரு சிறப்பு உலக அளவில் பேசப்படுகிறது. அது ராமேசுவரம் கோவிலின் மூன்றாம் பிரகாரம். மிகவும் பிரமாண்டமான பிரகாரம் இது. இந்தியாவில் வேறு எந்த ஒரு ஆலயத்திலும் அத்தகைய பிரகாரம் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த பிரகாரத்தின் தொடக்கத்தில் இருந்து பார்த்தால் பிகாரத்தின் இருபுறமும் மிக, மிக நேர்த்தியாக வடிக்கப்பட்ட கல் தூண்கள் அழகுற அமைக்கப்பட்டிருப்பதை காணலாம்.

ஒரு தூண் இம்மி அளவு பிசகாமல் ஒரே நேர்கோட்டில் இருப்பதை பார்க்கும்போது நாம் ஆச்சரியத்தின் உச்சிக்கே சென்று விடுவோம். நம் மூததையர்களின் கலைச் சிறப்பையும், கை திறனையும் நினைத்து நம்மை அறியாமலே நமக்குள் சர்வம் வந்து ஒட்டிக் கொள்ளும்.

ஒரு நாள்தான் லீவு போட்டுவிட்டு வந்தேன் என்று அரக்க, பரக்க சாமி கும்பிட்டு, விட்டு இந்த மூன்றாம் பிரகாரத்தை பார்க்காமல் வந்து விடாதீர்கள். அவசியம் பார்த்துவிட்டு வாருங்கள். பக்தர்கள் வசதிக்காக மூன்றாம் பிரகாரம் எப்போதும் திறந்தே இருக்கும். மதியம் 1 மணிக்கு கோவில் நடை சாத்தப்பட்டாலும் கூட மூன்றாம் பிரகாரம் திறந்தே இருக்கும்.

முன்பு மூன்றாம் பிரகாரம் தூண்கள் இயற்கை அம்சத்துடன் இருந்தன. தற்போது அந்த பிரகார தூண்களுக்கு பல வர்ணம் பூசியுள்ளனர். இது மூன்றாம் பிரகாரத்தின் அழகை இரட்டிப்பாக்கி உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராமேஸ்வரம் தான் பிரகார மாளிகையில் தலைமையானது. வெளிநாட்டுக்கலைப் பேராசிரியர்களும், நம் நாட்டினரும் போற்றுவது இத்திருக்கோவிலின் பிரகாரங்களையே இது திருச்சுற்றுமாளிகை எனவும் அழைக்கப்படுகிறது.

இந்தியாவிலேயே திருச்சுற்று அமைப்புக்குப் பெயர் பெற்றது ராமேஷ்வரமேயாகும். அதை இம்மூன்றாம் சுற்றில் தான் கண்டு மகிழமுடியும். பல சந்நிதிகளும் போக்கு வரவு மிகுதியான கிழக்குப் பகுதியை விட்டுத் தெற்கே இதே சுற்றைக் காணும்போது அதன் உண்மை புலப்படும்.

ஒரு தூண்கூட முன்பின் நகராமல் ஆனால் எல்லாத் தூண்களும் தெரியுமாறுள்ள தென் திருச்சுற்றிற்கு மறக்காமல் சென்று வாருங்கள். இந்த மூன்றாம் சுற்று முத்துராமலிங்கச் சேதுபதி (கி.பி. 1740–1770) கட்டியதாகும். இந்தச்சுற்றுச்சுவர் உட்பட வெளியிலிருந்து கிழக்கு மேற்காக ஒவ்வொன்றும் 690 அடி நீளமுடையன உட்புறமாக இவை 649 அடி நீளமுடையவை.

இவையே உட்புறமாக ஒவ்வொன்றும் 395 அடி நீளமுடையவை. இத்திருச்சுற்று முழுதும் 4000அடி சுற்றளவுடையது. ஐந்தடி உயரமான திண்ணைகள் இருபுறமும் அமைக்கப்பெற்று 22 அடி 7.5 அங்குல உயரமான தூண்கள் உள்ளன. அத்தூண்கள் மென்மையான கருங்கல்லினால் ஆனவை பிரகாரம் முழுவதும் மொத்தம் 1212 தூண்கள் உள்ளன,

கடல்காற்று இக்கல் தூண்களை அரிக்கத் தொடங்கியதால் சிமெண்ட் பூச்சு செய்து ஸ்நோசெம் என்னும் வண்ணப் பூச்சும் பூசப்பட்டு இப்போது காப்பாற்றப்பட்டுள்ளது. இதனால் பழைய தூண் அழகு வேலைப்பாடுகள் உள்மறைந்துள்ளன. எனினும் இரண்டு பழைய தூண்களைப் பழைய முறையிலேயே வைத்துள்ளனர். இந்த பிரகாரம், தரையிலிருந்து 30 அடி உயரம் உடையவை.

பிரங்க்ளின் எட்கர்டன் எனும் அமெரிக்கர் கோவில் வருகையில் எழுதியதைக் கவனியுங்கள். "மேல் தளத்திலிருந்து கோவிலின் உட்புறம் முழுதும் கோபுரம் வரை காண முடிகிறது. இதுவரை நான் பார்த்த எந்தக் கோவிலும் காண இயலாத காட்சி இது" என்று வியக்கிறார்.

இருபது ஆண்டுகளுக்கு முன்பு இச்சுற்றைக் கண்டவர்களிடம் இது பற்றிக் கேட்டால் கதைகள் பல கூறுவர். ராமேஸ்வரத்திற்கு வடகிழக்கே இந்தத் தீவில் சுடுகாட்டான்பட்டி என்றொரு சிற்றூர் உள்ளது. அப்பகுதியின் பெண்டிரில் பெரும்பாலோர் இப்பெரிய சுற்றிலே தான் நெல்குத்திப் பிழைப்பு நடத்தினார்களாம்.

தரையில் நெல்லைக்குவித்து, கையில் உலக்கை பற்றி ஒரு காலால் நெல்லை உலக்கை வாய்க்குத் தள்ளியபடி பகல் முழுதும் நெல் குத்துவார்களாம். ஒரு நேரத்தில் நூறு பெண்டிராவது இப்பணியில் ஈடுபட்டிருப்பார்களாம்.


ராமநாதருக்குக் கைக்குத்தல் அரிசியே படையலாய்த்திருவமுது செய்தார்கள் என்பதாலும் நாள்தோறும் 90 படியரிச வடிக்கப்படும் என்பதாலும் இப்பணி தொடர்ந்து வந்தது. அத்திட்டப்படி நாள்தோறும் 360 பேர் குறைந்த அளவு உண்ணும்படியாக வடிக்கப்பட்டிருக்கும் இதை மடைப்பள்ளியைப் பார்த்தால் விளங்கும்.

பட்டைச்சோறு பிடிக்க என்று அமைக்கப்பட்ட மேடைக்கல்லை முதலில் உள்ளே இருத்திய பிறகே வாயில் அமைத்து முடித்திருக்கிறார்கள். ஏனென்றால் வாயில் வழியே நுழைய முடியாத பெரிய கல் இதுவாகும். இப்போது நாள்தோறும் 6 படியே வடிக்கப்படுகிறது. சுமார் பதினைந்து மடங்கு குறைக்கப்பட்டுவிட்டது.

1951ம் ஆண்டு இனாம் ஒழிப்புச் சட்டப்படி மதுரைப்பகுதியிலிருந்து 67 கிராமங்கள் அரசின் வசமாயின். இப்போது கோவில் சொத்துக்களை இனாம் போல மக்கள் சுவீகரிக்கும் வழக்கம் நாடு முழுவதும் வந்துவிட்டது. நாள்தோறும் 360 பேர் முதல் 500 பேர் சாப்பிட வாய்ப்பும், பெண்கள் நெல்குத்திப் பிழைத்த பிழைப்பும் இந்தக் காலத்தில் மறைந்து போய்விட்டன. □



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ராமேஸ்வரத்தில் ராமலிங்க பிரதிஷ்டை விழா!

ராமேஸ்வரம் கோவில் தல புராணத்தைத் தழுவிய திருவிழா, ராமலிங்கப் பிரதிஷ்டை விழா. தமிழ் ஆனி மாதம் வளர்பிறையின் ஆறாவது நாள் தொடங்கி, பவுர்ணமி வரை 10 நாட்களுக்கு நடத்தப்படுகின்றது.

ராவணனைக் கொன்றதால், ராமருக்கு மூன்று தோஷங்கள் ஏற்பட்டன.

முதல் தோஷம் : விச்ரவஸ் என்ற பிராமண மகரிஷியின் பிள்ளையான ராவணனை சம்ஹாரம் செய்ததால், ராமருக்கு 'பிரம்மஹத்தி தோஷம்' ஏற்பட்டது. இந்த தோஷத்தை அவர் போக்கிக் கொண்ட இடம் தான் ராமேஸ்வரம்.

இரண்டாவது தோஷம் : ராவணன் மாவீரனும் கூட! கார்த்த விரியார்ஜுனனையும், வாலியையும் தவிர, தான் சண்டை போட்ட அனைவரையும் ஜெயித்தவன். இப்படிப்பட்டவனைக் கொன்றதால், ராமருக்கு 'வீரஹத்தி தோஷம் உண்டாயிற்று. இந்த தோஷத்துக்குப் பிராயச்சித்தமாகத்தான் வேதாரண்யத்திலே ராமலிங்கத்தை பிரதிஷ்டை செய்தார் ராமர்.

மூன்றாவது தோஷம் : ராவணன் சிவபக்தன், வீணை வாசிப்பதில் நிபுணன். சாம கானம் பாடுவதில் வல்லவன். இம்மாதிரியான நல்ல அம்சங்களை 'சாயை' என்பார்கள். 'சாயை' என்றால் ஒளி, நிழல் என்ற இரண்டு அர்த்தமும் உண்டு. ஒளி என்ற பெருமைவாய்ந்த குணங்களை எல்லாம் குறிப்பிடும் 'சாயை' உடைய ராவணனை வதம் செய்ததால், ராமருக்கு 'சாயாஹத்தி' தோஷம் உண்டாயிற்று. இது தீர்வதற்காக, பட்டீஸ்வரத்தில் ராமலிங்கத்தை பிரதிஷ்டை செய்தார் ராமர். பொதுவாக ராமலிங்க பிரதிஷ்டைத் திருவிழா, ராமேஸ்வரத்தில் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

திருவிழாவின் முதல்நாளில், ராவணன் வதம் செய்யும் நிகழ்ச்சி நடைபெறும். இது திட்டக்குடியில் நடைபெறும். இரண்டாவது நாளில், விபீஷணுனுக்கு பட்டாபிஷேகம் நடைபெறும் நிகழ்ச்சி கோதண்டராமசாமி கோவிலில் நடைபெறும். மூன்றாம் நாள், ராமலிங்க பிரதிஷ்டை நிகழ்ச்சி ராமேஸ்வரம் கோவிலில் நடைபெறும். அடுத்த ஏழு நாட்களுக்கு இவ்விழா தொடர்ந்து நடைபெறும். விழா முடிவில், ராமரும் ராமநாதரும் பரிவார தேவதைகளோடு ரதத்தில் பவனி வருவர். விழா நடைபெறும் அனைத்து நாட்களிலும் வேத பாராயணம் நடைபெறும். விழா தொடங்கும்போதும், அது முடிவடையும் போதும், அர்ச்சனையின்போதும், திருவமுத்து படைக்கும்போதும், உத்ஸவத்தின் தொடக்கத்திலும், முடிவிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டைப்பட குறிப்பு

**திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணி சுவாமி கோயில் மாசி மக திருவிழாவின் இரண்டாவது நாள் நிகழ்வில் லண்டன் அன்பர்கள் சிறிரங்கன், யோகநாதன், ஜெயக்குமார், மோகன், தவமுருகநாதன் ஆதரவில் நடைபெற்ற பரதநாட்டிய விழாவின் பரதநாட்டிய மாணவிகளுடன் ஆசிரியர். படங்கள் உதவி : நவராஜ்**

கோவிலில் உள்ள பெரிய மணிகள் அடிக்கப்படும். இது அனைத்து பக்தர்களின் கவனத்தை ஈர்க்கும்.

'கோடி தீர்த்தம்' என்பது, விசாலாட்சியம்மன் சந்நிதிக்கு அருகில் உள்ளது. ராமன் தன் வில்லினால் இதை உருவாக்கி, சிவலிங்க பிரதிஷ்டையின்போது பயன்படுத்தியதால் இந்நீர் புனிதமாகியது. வடக்கிலிருந்து வரும் பயணிகள் கங்கைநீர் கொண்டு வந்து இங்கு பூஜிப்பதும், இங்குள்ள கோடி தீர்த்தத்தில் இருந்து புனிதநீர் எடுத்துச் சென்று காசியில் வழிபடுவதும் தொன்றுதொட்ட நிகழ்ச்சி.

புகழ்பெற்ற மூன்றாம் பிரகாரத்தின் வடமேற்கு மூலையில் உள்ள சந்நிதியில், ராமலிங்க பிரதிஷ்டை நிகழ்ச்சியானது, தத்ரூபமாகக் காட்சி அளிக்கும் வகையில் கதை உருவங்கள் அமைக்கப் பெற்றிருக்கின்றன. இதில், ராமனும் சீதையும் லிங்கப் பிரதிஷ்டை செய்வதைத் தரிசிக்கலாம். சீதையின் முழங்கால், பீடத்தின் விளிம்பைத் தொட்டுக் கொண்டிருக்கிறது. ராமனின் இடதுபக்கம், அவனது வில் செங்குத்தாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. சுற்றிலும் சுக்ரீவன், அனுமன், விபீஷணன் முதலிய உருவங்களையும் காணலாம். ராமேஸ்வரத்தில் அவசியம் தரிசிக்க வேண்டிய திருக்காட்சி இது. ☐


**ஸ்ரீமதி யோகா தில்லைநாதன்**
23வது ஆண்டாக நடாத்தும்

# கானக்குயில் 2016

**நாள் : 02.07.2016 - மாலை 6.00 மணிக்கு**
போட்டியில் பங்குபெற உங்கள் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன

**பால கானக்குயில்**
8 - 12 வயதிற்குள்

**இளைய கானக்குயில்**
13 - 16 வயதிற்குள்

**கானக்குயில்**
17 வயதிற்கு மேல்

விண்ணப்ப முடிவு தேதி : 10 மார்ச் 2016

போன் : **02034898309** | மொபைல் : **07903327708** | Email : **arumthill@hotmail.com**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் இலக்கியங்களில் விலங்கினங்கள்

நுணாவிலூர் கா.விசயரத்தினம்
(இலண்டன்)

உலகின் உயிரினங்கள் அனைத்தும் வாழ்வதற்கே பிறக்கின்றன. பிறப்பு, வாழ்வு, இறப்பு ஆகிய மூன்றும் சுழற் தொடர் நிகழ்வாகும். அதனாற்றான் ஒவ்வொரு இனமும் அழியாது நிலைத்து உள்ளன. மனிதன் தன் வாழ்வியலை மேம்படுத்தினான். தம்மைத் தாமே ஆளுவதற்கு மன்னர் ஆட்சி எழுந்தது. அதில், பாண்டிய மன்னர் சங்கம் அமைத்துத் தமிழை வளர்த்தனர். அச் சங்கத்தில் எழுந்த நூல்களில் இலக்கியம், அறிவியல், வாழ்வியல், இயற்கை வளம் போன்றவை பரவலாகப் பேசப்படும் பாங்கினைக் காணலாம். இந்நூல்கள் மக்களுக்காக அவர் நலன் கருதி எழுந்தனவாகும். மக்கள் இயற்கையுடன் இணைந்து, பிணைந்து வாழ்பவர்கள். அவர்கள் ஓரறிவு உயிரிலிருந்து ஆறறிவு உயிரினங்கள்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வரை அன்பு காட்டி அரவணைத்துத் தம் வாழ்வியலை நடத்துபவர்கள். அதில் அசைவற்ற, ஊர்வன, நீர் வாழ்வன, பறப்பன, நடப்பன ஆகிய உயிரினங்கள் பற்றிய செய்திகளை நம் இலக்கியங்களில் காண்கின்றோம். இவற்றில் விலங்குகள் பற்றிச் சங்க இலக்கியங்களில் எவ்வண்ணம் பேசப்படுகின்றன என்பதைக் காண்பதே இக் கட்டுரையின் நோக்காகும்.

யானை, சிங்கம், புலி, குதிரை, ஆடு, மாடு, பசு, ஒட்டகம், மான், மரை, கரடி, முயல், பன்றி, நாய், பூனை, குரங்கு, எருமை, நரி, ஆமை, முதலை, உடும்பு, கழுதை, பாம்பு, எலி, பல்லி போன்ற விலங்கினங்கள் மக்களோடு தொடர்புபட்டனவாகும். இனி, விலங்கினங்கள் சங்க நூல்களிற் பவனி வரும் பாங்கினையும் காண்போம்.

தொல்காப்பியம்

விலங்குகள்: சங்க இலக்கியங்களில் எமக்குக் கிடைக்கக் கூடிய மூத்த நூலானதும் இடைச் சங்கத்தில் எழுந்ததுமான தொல்காப்பியத்தை யாத்த தொல்காப்பியர் (கி.மு.711) இற்றைக்கு 2800 ஆண்டுகளுக்கு முன்பு ஐந்திணைகளின் கருப்பொருள் கூறும் பொழுது குறிஞ்சிக்கு-புலி, கரடி, யானை, சிங்கம் என்றும், முல்லைக்கு-மான் (உழையும், புல்வாயும்), முயல் என்றும், பாலைக்கு - வலியழிந்த யானை, புலி, செந்நாய் என்றும், மருதத்திற்கு-எருமை, நீர்நாய் என்றும், நெய்தலுக்கு-சுறாமீன் என்றும் கூறி ஐந்நிலங்களுக்கும் விலங்கினங்களை வகுத்துள்ளமை போற்றற்பாலதாகும்.

"தானை யானை குதிரை என்ற, நோனார் உட்கும் மூவகை நிலையும்" (பொருள் 72) பகைவர்கள் அஞ்சும்படியான காலாட்படை, யானைப்படை, குதிரைப்படை என்னும் முப்படையின் பெருமை பற்றித் தும்பைத் திணையில் தொல்காப்பியர் கூறியுள்ளார். மன்னர் ஆட்சிக் காலத்தில் இந்த முப்படைகள் முன்னின்று யுத்தம் புரிந்து வெற்றிவாகை சூட உதவியுள்ளன.

மேலும் தொல்காப்பியர் "மாவும் புள்ளும் ஐயறி வினவே" (பொருள். 576) என்றும், "நாயே பன்றி புலிமுயல் நான்கும்.." (பொருள் 552) என்றும், "ஆடுங் குதிரையும் நவ்வியும் உழையும் ஓடும் புல்வாய்" (பொருள். 556)-(ஆடு, குதிரை, புள்ளிமான், கலைமான், மான்) என்றும், "யானையும் குதிரையும் கழுதையும் கடமையும் மானும்.." - (பொருள். 559) என்றும், "எருமையும் மரையும்.." (பொருள். 560) என்றும், "ஒட்டகம்" (பொருள். 562) எனவும் கூறிப் பல விலங்குகளை மரபியற் பகுதியிற் காட்டியுள்ளார்.

புறநானூறு

விலங்குகள்: கடைச் சங்கத்தில் எழுந்ததும் எட்டுத்தொகை நூல்களில் ஒன்றானதுமான புறம் பாடும் புறநானூற்றில்



பற்பல வகையான விலங்கினங்கள் பற்றிய செய்திகளையும் காண்கின்றோம். அவற்றில் யானை-களிறு-வேழம் பிடி-கைம்மா-கைமான், குதிரை-புரவி-கலிமா-வயமான் மா-பரி-கலிமான், சிங்கம் மடங்கல், மான் கவரி-கலை -பிணை-மறி-புல்வாய் இரலை-கடமான் நவ்வி-மடமான், புலி-உழுவை-குரளை-வரிவயம், பூனை-வெருகு (காட்டுப் பூனை)-வெருக்கு, பாம்பு-அரவம் நாகம் அரா, குரங்கு-மந்தி-கடுவன் கலை, பசு-ஆன் ஆ-நிரை-கறவை, நாய் நீர்நாய் கதநாய் ஞமலி, ஆடு-மறி-மடங்கல், நத்தை-நந்து, முதலை-கராம் கரா, பன்றி-முள்ளம் பன்றி-முளவு -கேழல், எருது-காளை-பகடு-ஏறு, நரி, அணில், உடும்பு, எருமை, எலி, எறும்பு, கழுதை, ஆமை, பல்லி, முயல் ஆகிய விலங்கினங்கள் ஒரு சிலவாகும். இவ்விலங்கினங்களில் யானையைப் பற்றி அதிகமாகப் பேசப்பட்டுள்ளதையும் புறநானூற்றில் காண்கின்றோம்.

கலித்தொகை

விலங்குகள்: எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான கலித்தொகையில் யானை-வேழம் பிடி-களிறு-கயந்தலை (யானைக் கன்று)-வாரணம் கைம்மா, குதிரை-கடுமா - மான் கலிமான் பரிமா, மான் கலை (ஆண் மான்) - மான்பிணை (பெண் மான்) இரலை-ஏறு, பசு - கோவினம் ஆ - பொருநாகு - ஆநாகு - கறவை - மரை ஆ (காட்டுப் பசு), சிங்கம் விலங்கு மான் அரிமா, புலி இரும்புலி (பெரிய புலி) - வேங்கை - கொடுவரி, குரங்கு - கடுவன் (ஆண்), எருது - பகடு - ஏறு, எருமை - நாகு (பெண் எருமை), முதலை - கராம், ஆடு - புல்லினம், நாய் கதநாய் (வேட்டை நாய்), தேரை, நரி ஆகிய விலங்கினங்கள் பற்றிய குறிப்புகளையும் பார்க்கின்றோம்.

ஐங்குறுநூறு

விலங்குகள்: எட்டுத்தொகை நூல்களில் ஒன்றானதும் கடைச் சங்க காலத்தில் எழுந்ததுமான ஐங்குறுநூறு எனும் இலக்கிய நூலில் யானை - களிறு - வேழம் கோட்டுமா - பிடி, குதிரை - கடுமான் புரவி - வயமான், மான் மடமான் மாண்பிணை - நெடுமான் கணமா - மறி (மான் கன்று), புலி - வயமா - வேங்கை - வயமான், நாய் நீர் நாய் செந்நாய், குரங்கு - மந்தி - கடுவன், எருமை - பகடு, முதலை - முதலைப் போத்து (ஆண் முதலை) - பார்ப்பு (குட்டி), நண்டு - களவன் புள்ளிக் களவன் ஆகிய விலங்கினங்கள் நடமாடுவதையும் காண்கின்றோம்.

அகநானூறு

விலங்குகள்: எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான அகநானூறு எனும் அகம் பாடும் இலக்கிய நூலில் குதிரை - புரவி - கலிமா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

– பரி – நன்மான் மா – மான் இவுளி, புலி – ஏற்றை – பிணை இரும்புலி – வயமான் வாள்வரி – மடப்பிணை இரலை – குருளை – உழுவை – போத்து (ஆண் புலி), மான் பிணை – மான்அதர் உழைமான் (ஆண் மான்), நாய் நீர்நாய் காதநாய் (சினமிக்க நாய்) – செந்நாய் வயநாய் (வேட்டை நாய்) – ஞாளி – ஞமலி – பிணவு (பெட்டை நாய்), யானை – களிறு – நாகம் பொங்கடி – ஓய்களிறு (இளைத்த களிறு) – மடப்பிடி – குழவி இரும்பிடி (பெரிய பிடி யானை) – வயவுப் பிடி (சூல் கொண்ட பிடி யானை), குரங்கு – கடுவன் முசு – கலை, பசு – ஆ – கறவை – நாகுஆ (கன்றையுடைய பசு), எருமை – பகடு, பன்றி – முளவுமா (முள்ளம் பன்றி) – பிணவல், கரடி – எண்கு, சிங்கம் உளைமான், கழுதை – அத்திரி (கோவேறு கழுதை), செம்மரிக் கிடாய் தகா, தேரை – நுணல், எருது மூதேறு, ஆளி யாளி (ஒரு விலங்கு), நண்டு – அலவன் களவன், பல்லி, முதலை ஆகிய விலங்கினங்கள் நடமாடித் திரிவதையும் காணலாம்.

பதிற்றுப்பத்து

விலங்குகள்: எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான பதிற்றுப்பத்து எனும் சங்க நூலில் குதிரை – மா – கலிமா – புரவி, யானை – களிறு (ஆண் யானை) – பிடி (பெண் யானை) – மழகளிறு (இளை யானை), மான் கவரிமான் இரலை (புள்ளிமான்) – ஏறு (ஆண்மான்), சிங்கம் அரிமான் வயமான – ஏறு, பசு மூதா ஆ (கிழப் பசு) – பல் ஆன் ஆ கெழு – மரையா (காட்டுப் பசு) – ஆமான் ஆ – கபிலை (காராம்பசு) – ஆயம் (பசுக்கூட்டம்), எருது – ஏறு – பகடு, பன்றி – ஏனம், நரி, புலி ஆகிய விலங்கினங்கள் பற்றிப் பேசப்படும் செய்திகளையும் காண்கின்றோம்.

பரிபாடல்

விலங்குகள்: எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான பரிபாடல் எனும் கடைச்சங்க நூலில் யானை – களிறு – கயமா – புகர்முகம் கைம்மான் பிணிமுகம் வாரணம் மடப்பிடி – கைம்மா இரும்பிடி (கரிய பிடி), மதமா, வயக்கரி, குதிரை – பரி – கலிமடமா – மடமா (இளைய குதிரை) – கடுமா – வயமா – கயமா, ஆடு – மறி (குட்டி) – விடை (ஆட்டுக் குட்டி), பாம்பு – நாகம் பாப்பு – அரவம், மான் மான்மறி (குட்டி), எருது – பாண்டி, கழுதை – அத்திரி (கோவேறு கழுதை), பூனை – பூசை ஆகிய விலங்கினங்கள் கூறப்பட்டுள்ளதையும் பார்க்கின்றோம்.

சிலப்பதிகாரம்

ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றான தலைசிறந்த இலக்கிய நூலான சிலப்பதிகாரத்தில் விலங்கினங்கள் பற்றியும் பறவையினங்கள் பற்றியும் எடுத்தாளப்பட்ட பாங்கினையும் கண்டு மகிழ்வோம்.

விலங்குகள்: புலி – கொடுவரி – வாள்வரி, சிங்கம் அரி – அரிமா, யானை – ஆனை – உவா – களிறு – குஞ்சரம் வேழம் பிடி (பெண் யானை), மான் எகினம் கலை (ஆண் மான்) – காசறை (கவரிமான்), எருமை – காரான் எருமை மாடு, ஆட்டுக் கடா – ஏழகம,; எருது – ஏறு, குதிரை – புரவி, குரங்கு – ஊகம், ஆடு – தகர் மறி – யாடு, பசு – ஆன் கறவை, நண்டு – அலவன், பன்றி – ஏனம், முயல், முதலை ஆகிய விலங்கினங்கள் சிலப்பதிகாரம் முழுவதும் ஓடி, ஆடி, விளையாடும் காட்சிகள் எமக்கு விருந்தாயமைந்துள்ளன.

சிலப்பதிகாரத்தில் யானை மீது சிறந்த ஆபரணங்கள் அணிந்த மகளிரை அமரச்செய்து பூம்புகார் நகரமெங்கும் கோவலன் கண்ணகி அவர்களது திருமணச் செய்தியை அறிவிக்கச் செய்தனர்.

" யானை எருத்தத்து, அணியிழையார்,
மேல் இரீஇ,
மாநகர்க்கு ஈந்தார் மணம்" – (1:4344)

இளங்கோவடிகள் காலத்திலேயே மகளிர் யானை மீது அமர்ந்து திருமணச் செய்தியை யாவருக்கும் அறிவித்து வருதல் அக்கால வழக்கமாய் இருந்துள்ளமையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிவாகின்றது.

தெய்வமும் வாகனமும்

தமிழர் அதிலும் சைவசமயத்தவர்கள் வணங்குவதற்குப் பற்பல தெய்வங்கள் உள்ளன. இத்தெய்வங்கள் பயணிப்பதற்காக அவர்களுக்கு வாகனங்களாகப் பல விலங்குகளை வகுத்துக் கொடுத்துள்ளனர் அக்காலச் சமயவாதிகள். இனி, எந்தெந்தத் தெய்வங்களுக்கு எந்தெந்த விலங்குகள் வாகனமாக அமர்த்தப்பட்டுள்ள சீரினையும் காண்போம்.

விலங்குகள்: சிவன் நந்தி, விநாயகர் எலி, ஐயப்பன் குதிரை, விஷ்ணு - பாம்பு, அக்னி - ஆட்டுக் கடா, வயிரவர் நாய், துர்க்கா - புலி, பார்வதி - சிங்கம், இந்திரன் - யானை, வாயுபகவான் மான், இயமன் - எருமை, காளி - கழுதை, வருணன் - ஆமை, சுக்கிரன் - முதலை ஆகிய விலங்கினங்களைத் தெய்வங்களின் வாகனமாக நியமித்த சிறப்பினையும் காண்கின்றோம்.

முடிவுரை

மேற்காட்டிய விலங்குகளுக்கு ஒரு சொற்பதத்திற்குப் பற்பல சொற்பதங்கள் பாவனைப் படுத்தப்பட்டுள்ளதைப் பார்த்தோம். சங்ககாலத்தில் இவ்வாறான சொற்பதங்கள் மலிந்துள்ளதில் ஒரு வியப்பும் இல்லை. அக்காலத்தில் வாழ்ந்த புகழ் பூத்த புலவர்களின் தமிழ் இலக்கண, இலக்கியத் தரம், வளர்ச்சி மிக உச்ச நிலையில் இருந்துள்ளதையும் நாம் அறிவோம். ஆனால் அக்காலத்தில் நடைமுறையில் இருந்துள்ள சொற்பதங்கள் நாளடைவில் பாவனை குன்றி இன்று அவற்றின் பொருள் புரியாத நிலைக்கு வந்துள்ளமை மிக்க வேதனைக்குரியதொன்றாகும். இது அவற்றில் ஒரு சில உதாரணங்களாகும்.

விலங்குகள்: யானை கைம்மா, கைம்மான், கயந்தலை, கோட்டுமா, பொங்கடி, புலி உழுவை, குரளை, வரிவயம், வயமா, எருமை பகடு, காரான், குதிரை கலிமா, வயமான், இவுளி, பூனை வெருகு, வெருக்கு, மான் உழை, புல்வாய், நவ்வி, இரலை, கடமான், நண்டு களவன், புள்ளிக் களவன், அலவன், சிங்கம் மடங்கல், நாய் ஞமலி, முதலை கரா, கராம், பன்றி முளவு, பசு பொருநாகு, ஆநாகு, என்று இன்று எழுதினால் ஒருவருக்கும் புரியப்போவதில்லை.

மனிதன் என்றும் இயற்கையோடு சேர்ந்து வாழப்பவன். அவ்வண்ணமே இன்றும் வாழ்கின்றான். அவனுக்கு விலங்குகளுடன் நெருங்கிய தொடர்புண்டு. இன்று சில விலங்குகள் வீட்டு விலங்காக மாறியுள்ளன. அவற்றால் அவன் பெரும் நன்மைகள் பெறுகின்றான். அதனாற்றான் அவற்றுடன் இணைந்த நூல்கள் அவனுக்காக வெளிவருவது வழக்கம். அந்நூல்கள்தான் உயிர் பெற்ற இயற்கை இலக்கியங்களாகும். இவை மனிதனை ஆற்றுப்படுத்தி, அறநெறி புகட்டி, மனிதநேயத்துடன் மாண்புற வாழ, அவன் வாழ்வியல் சிறந்தோங்கி, நாடு செழித்து, மக்கள் ஒன்றிணைந்து, ஓர் உன்னத உலகம் தோன்ற வேண்டும் என்று சிந்தையிற் பதிப்போம். □

## துவார பாலகர்கள்

சிவபெருமான் கருவறைக்கு இடது வலது புறங்களில் இரண்டு துவாரபாலகர்கள் இருக்கிறார்கள். அவர்களில் ஒருவர் கோபமான முகத்துடனும், மற்றொருவர் சாந்தமான முகத்துடனும் காணப்படுகிறார்கள். கோபம், ஆணவம் போன்ற குணங்களைக் கொண்டிருக்கும் ஒருவர் பெருமானை வணங்கியபின் சாந்தமான மனதுக்கு மாறிவிடுகிறாராம். இதுவே துவார பாலகர்கள் சிலை அமைப்பின் தத்துவம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



– அரவிந்தன்

# தேவைப்படும் திருப்பம்!

இறுதியாக இலங்கையில் நடந்தேறிய பொதுத் தேர்தலில் வட-கிழக்கு வாக்களிப்பைப் பார்த்த போது ஒரு உண்மை வெளிப்பட்டது. அது பேரறிஞர் அரிஸ்டாட்டில் சென்னை அரசியல் விலங்குகள் என்றதின் அர்த்தமுள்ள 'புரிதல்' என்பதன் வெளிப்படை எனலாம்.

இன்று ஊடகங்களும் அரசியல் விமர்சகர்களும் தமிழர் தலைமைக்குள் குத்துவெட்டு எனக் குரல் எழுப்புகின்றனர். சிலர், சற்று முன் சென்று சம்பந்தர் ஐயாவின் தலைமைப் பதவிக்கு நீதியரசர் ஆசைப்படுவதாக எழுதுகின்றனர். சம்பந்தர் ஐயாவும் தாம் விட்டுக் கொடுப்புக்கு ஆயத்தம் என்றார். இது 'நாமம்' போடும் நாடகம் என்பது நமக்குத் தெரியாத புதிரா என்ன. ஒரு உண்மையை மக்கள் அறிவர். கூட்டமைப்பு என்பது 'தேசீயத் தலைவர்' தன் அரசியல் நிகழ்ச்சி நிரலுக்காக ஏற்படுத்திய-ஏற்றுக் கொள்ள வைத்த ஒரு கூட்டு, அந்தக் கூட்டுக்கு ஒரு தலைமைப் பதவியும் உருவாக்கப்பட்டமை அவரது அரசியல் நகர்வு வசதிக்காக மட்டுமே. 'சங்கரியாரின்' சறுக்கல், யோசப் பரராசசிங்கம் அவர்களின் அகால மறைவு என்பன தலைமைப் பதவியை சம்பந்தர் ஐயா அடையக் காரணமானவை. இந்தக் கூட்டில் உள்ள எவரையும் தனது ஆத்மார்த்தமான விசுவாசிகள் எனத் தேசீயத்தலைவர் எண்ணியிருக்கமாட்டார். இவர்களும் அவர் எண்ணும்படியாக என்றும் நடந்து கொண்டதுமில்லை. 'விசுவாசம்' என்பது மு. சிவசிதம்பரம் அவர்களுடன் முடிந்துவிட்டது என்பதையும் அவர் அறிவார். 2009 மே அநர்த்தம் நடந்த நாட்களில் இவர்களில் எவரும் மக்களுடன் இருந்திருக்கவும் இல்லை. அதையும் மக்கள் அறிந்திருந்தார்கள். இதுவரை எந்தத் திட்டமும் அரசிடம் மக்களுக்காக இவர்கள் முன் வைத்ததுமில்லை. வெளியில் சொல்லித்திரியும் 'சமஷ்டி' என்பதைப் பாராளுமன்றத்தில் இதுவரை இவர்கள் உச்சரித்ததுமில்லை. பாராளுமன்ற ஆசனங்களே இவர்களது குறி. அங்கு கிடைக்கும் வசதிகளும் வாய்ப்புக்களுமே நோக்கம். இப்போ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதவிகளும் வேண்டுமென்பதில் போட்டி. இப்போது இவர்களின் உதாரண புருஷர் 'ரவூப் ஹக்கீம்' தான். இப்போது கொடி ஏற்றலுக்கும் 'சுதந்திர தினப் பால்சோறு' உண்பதற்குமான பலத்த போட்டி வோட்டுப் போட்ட 'அரசியல் விலங்குகள்' இப்போ கூட்டமாகச் சிந்திக்க விழைகின்றனர். தங்கள் சுய நன்மைக்காக இருக்கும் ஒரே ஒரு மாசாண சபையையும் கலைக்கக் கனவு காணுகின்றனர். தகர்க்க உள்வீட்டு உரசல்களை ஊக்குவிக்கின்றனர்.

நீதியரசர் நிறைவேற்றிய 'இனப்படு கொலைத் தீர்மானம்' அவரை வெளியுலகுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டியது. அவரோடு இருந்த உதட்டோரத்து உறவுகளுக்கு இந்தத் தீர்மானம் உதறலை ஏற்படுத்தியது. உள் உறவும் வெளிவேடமுமாக காலத்துக்குக் காலம் மக்கள் காதில் பூச்சுற்றிய கயவர்களுக்கு விபூஷண வேடம் கலைந்தநிலையானது. இன்று "காணாமல் போனோர் என எவருமில்லை. அவர்கள் எல்லாம் இறந்தவர்கள் என 'ரணில்' சொல்லுகிறார். அப்படியானால் பதின்மூன்றாயிரம் பேர் இராணுவத்திடம் பொது மக்கள் முன் கையளிக்கப்பட்டார்களே, அதை அரசு ஏற்றுக் கொண்டிருந்ததே அவர்கள் எங்கே? நீதியரசர் நிறைவேற்றிய தீர்மானத்தின்படி பார்த்தால் அது இனப்படுகொலையாக அல்லவா இருக்க வேண்டும். இதைக் கேட்கக் கூட இந்த கூட்டமைப்பினருக்கு குரல் எழும்பவில்லை. பின் கதவு பேரம் பேசவைக்காது தான். எது எப்படியோ நீதியரசரை மக்கள் நினைக்கத் தொடங்கியிருப்பது உண்மை.

அவரும் தவறுவிட்டவர்தான். ஆரம்ப காலம் சற்று சலனமானதுதான். அலரிமாளிகை பதவி ஏற்பு, அதன்பின்னான புலம்பெயர் தமிழனுக்கான புத்திமதிகள், தமிழக உணர்வுகளைப் பற்றிய தப்புத்தாளம், போராளிகள் பற்றிய விமர்சனம் இப்படிச் சில, ஆனால் இன்று அவர் பார்வை வித்தியாசமானது. 'சகவாச' தோஷம் தன்னைத் தவறுதலாக வழிநடத்தியமை அவருக்குப் புரிந்திருக்கிறது. அதற்காக அவர் வேதனைப்பட்டுக் கொள்கிறார். "அவமானப்படாதவிடத்து, வெற்றிகளை அடைவது சாத்தியமல்ல" என்ற 'லீ-குவான்-யூ'வின் அனுபவ வார்த்தைகளை அவர் அறிந்து இருப்பார். தமிழர் பிரச்சனைபற்றி அமைச்சர் 'ராஜித' முன் அவர் ஆற்றிய உரை, அதன் சொற்றொடர் ஆட்சி, பேராயரின் பிறந்த தினத்தில் வெளிப்பாணத்தில் 'ரணில்' முன்பு, அவர்தன் மக்களைப் பற்றி எடுத்துச் சொன்ன ஆளுமை, "நான் தீவிரவாதியா?" என்று கேட்ட தைரியம்; "என் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளே என் பாதை, அதை மாற்றமாட்டேன், எந்தக் கட்டத்திலும் மீறி நடக்க முடியாது" என வெளிப்படையாகப் பேசிய தீரம், அதன் பின் வருகையான சிவில் சமூக அமைப்பான 'தமிழர் பேரவை' பற்றிய தர்க்கரீதியான கருத்துகள், இரண்டுமாத இடைவெளிக்குள் மக்கள் முன் வைத்த தீர்வுத் திட்டம், தன்னை விமர்சித்த வீழ்த்திவிட நினைத்தவர்களை வெகு லாவகமாக தூக்கி வீசிய துணிவு இவைகள் 1959ல் நம்மை விட்டுப் போன கோப்பாய் கோமான் வன்னிய சிங்கம் அவர்களை மனதுள் நினைக்க வைக்கின்றது.

ஏகாதிபத்திய வாதிகளால் அவரை எடுத்தாள முடியவில்லை. அண்மையில் வந்த அமெரிக்காவின் 'சமந்தாபவர் சம்பந்தன் ஐயாவுடன் பேசினார். ஒரு மணி நேரம் அவர் சொன்னார் - இவர் கேட்டார். அதே 'பவர்' யாழ் வந்து நீதியரசரையும் சந்தித்தார். அந்த இரு மணி நேரம் இவரது வாதத்தைத்தான் அவர் கேட்டார். இதுதான் இன்றைய சமகாலம்.

இந்த 'நிமிர்தல்' நிலைக்குமாயின் ஒரு மாற்றுத்தலைமைக்கு வழியேற்படலாம். அது காலத்தின் கட்டாயமும் தேசத்தின் தேவையுமாகும். இப்போ எதிரியின் முன் தைரியமாக எழுந்து நிற்கும் தலைமை வேண்டும். அதைத் தருவதற்கான தகுதி உடைய ஒருவரே திரு. விக்கினேஸ்வரன் ஏனெனில் அவர் ஒரு அரசியல் வியாபாரி அல்லர். □




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைமக்கள் யார்?

நண்பர் ஒருவரைப் பல வருடங்களின் பின் சந்தித்தேன். தன் வேலை, குடும்பம் பற்றி மகிழ்ச்சியுடன் என்னோடு அளவளாவினார். பொதுத் தொண்டு எதுவும் செய்வதில்லையா? என்று வினவினேன். பொதுத் தொண்டு செய்தால் அவப்பெயர்தான் கேட்கவேண்டும் என்று ஆதங்கப்பட்டார் அவர். இந்தப் பதில் எனக்கு ஆச்சரியமாக இருந்தது. ஏனெனில், அவரின் தந்தையை நான் அறிவேன். நண்பரின் தந்தையோ பலருக்கும் உதவியவர். இலங்கையிலே பல வருடங்கள் வாழ்ந்தவர். வேலை இடத்திலும் வெளியிலும் இன, மத, மொழி வேறுபாடு எதுவும் பார்க்காது எல்லோருக்கும் உதவினார். அதனால் அவர் எல்லா இனத்தவராலும் நன்கு மதிக்கப்பட்டார், இன அழிப்புக் காலத்திலே கூட அவர் பாதுகாக்கப்பட்டார். அந்த மனிதரின் வழியை அவரின் மைந்தரும் தொடர்வார் என்ற என் எதிர்பார்ப்புத்தான் என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

'நின்று பயனுதவி நில்லா அரம்பையின் கீழ்க்
கன்றும் உதவுங் கனி'

என்ற பாடல் வரிகள் தப்பானவையா என்ற கேள்வி என்னுள் எழுந்தது. வாழை வளர்ந்து கனி கொடுக்கும். அந்தக் கனியைப் பெறுவதற்கு மனிதன் வாழையையே வெட்டுகிறான். அந்த வாழையின் கன்று கீழே இருந்து அதைப் பார்க்கிறது. ஆனால் அந்தத் தாக்கத்தால், தன்னையும் வெட்டுவார்களே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று நினைத்து அது குலை ஈனாமல் விடுவதில்லை.

நல்ல குடும்பத்திலே பிறந்தவர்கள் எப்பொழுதும் மற்றவர்களுக்கு உதவப் பின்நிற்பதில்லை. வேறு நாடுகளில் இயற்கையின் சீற்றத்தால் அழிவுகள் ஏற்படும்போது பிரித்தானிய நாட்டு மக்கள் நிதியுதவி தாராளமாக வழங்குவதைக் காணலாம். எந்த நாடு, என்ன இன மக்கள் என்றெல்லாம் அவர்கள் பிரித்துப் பார்ப்பதில்லை. நாடு, மதம், மொழிகளுக்கு அப்பாற்பட்டது அவர்களின் சிந்தனை. குஜராத்திலே பூகம்பம் ஆகட்டும், இத்தியோப்பிய நாட்டிலே உணவுப் பஞ்சம் ஆகட்டும், பங்காள தேசத்தில் வெள்ளப் பெருக்காகட்டும், எதுவாக இருந்தாலும் உதவ அவர்கள் தயங்குவதில்லை.

எல்லோருக்கும் உதவுதல் என்ற பெருமித உணர்வு, முயற்சி என்னும் உயர்ந்த பண்பிலேதான் தங்கியிருக்கிறது.

தாளாண்மை என்னும் தகைமைக்கண்
தங்கிற்றே
வேளாண்மை என்னும் செருக்கு
குறள் 623

என்பார் திருவள்ளுவர்.

பாலர் வகுப்பிலேயே நாம் ஒப்புரவொழுகு என்று படித்திருக்கிறோம். ஆனால் நம்மிலே பலர் அதன்படி ஒழுகுவதில்லை. சுயநலம், பேராசை, ஏன் செய்யவேண்டும் என்ற மமதை, அவர்கள் நம்மினத்தவரல்லவே, அவர்களுக்கு நாம் ஏன் உதவவேண்டும் என்று பல காரணங்கள் சொல்லப்படும். பிறர்க்கு உதவி செய்யாதவனை, செய்ய முன்வராதவனை உலகம் ஒருபோதும் மதிக்காது. அவனை உயிரற்றவனாகவே கருதும்.

ஒத்த தறிவான் உயிர்வாழ்வான்
மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்
குறள் 224

பிறர்க்குத் தானாகச் சென்று உதவுபவனே உயிர்வாழ்பவனாகக் கருதப்படுவான். அப்படிச் செய்யாதவன் இறந்தவனுக்குச் சமமானவன் என்கிறார் வள்ளுவர்.

தன்னலம் கருதாது உதவுபவர்கள் அதனால் வரும் இன்ப துன்பங்களைப் பற்றிப் பெரிதாக நினைக்கமாட்டார்கள். மெய் வருத்தம் பார்க்கமாட்டார்கள். பழிச்சொல் எதையும் பெரிதுபடுத்த மாட்டார்கள். தம் கடமையை மட்டும் செய்வார்கள். யாருக்குச் செய்கிறோம் என்று ஆராயமாட்டார்கள். அதற்காகப் பிரதிபலனையும் அவர்கள் எதிர்பார்ப்பதில்லை. அதனாலேதான் அவர்கள் உயர்ந்தவர்கள் ஆகின்றார்கள். அப்படி, பலனை எதிர்பார்க்காது, தமக்கென முயலாது, பிறர்க்கென வாழ்வோர்; இன்னும் இருப்பதனாலேயே இந்த உலகம் அழியாமல் நிலைத்திருக்கிறது. அவர்களை இந்த உலகம் தலையாய மக்கள் எனக் கொண்டாடும்.

இன்னர் இனையர் எமர்பிறர் என்னுஞ்சொல்
என்னும் இலராம் இயல்பினால் - துன்னித்
தொலைமக்கள் துன்பந்தீர்ப் பாரேயார் மாட்டும்
தலைமக்கள் ஆகற்பா லார்
நாலடியார் 205

எமர் - எம்மவர், துன்னி - நெருங்கி, தொலைமக்கள் தேவை உடையவர்கள்

இவர்கள் இன்னார். எம்முடைய மக்களா வேறு இன மக்களா என்று பேதம் பார்க்காது, யார் யாரெல்லாம் நிலையிழந்து வாடுகிறார்களோ அவர்களை அடைந்து அவர்களுக்குத் தொண்டு செய்பவர்களை உலகம் போற்றும், அவர்களையே தலைமக்கள் என்று பாராட்டும். □



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# மகிழ்ச்சி அளிக்கும்

## ஆனந்தமான பயணம்

தமிழ் நாட்டுக்கு வரும்போது

சிறந்த வாகன சேவையை உங்களுக்கு

தருவதற்கு ஆயத்தமாக உள்ளோம்.



தொடர்புக்கு :

**செல்வம்**



**தொலைபேசி எண்:**

**9788059977, 944175825**

பல வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க

தமிழகத்திலிருந்து உங்களுக்குத் தேவையான புத்தகங்களை

ஒரு கிழமையில் பெற்றுத் தருவோம்

எங்களிடம் தற்சமயம் உள்ள புத்தகங்கள்

1. அபிராமி, அந்தாதி - கிவா. ஜகந்நாதன் உரையுடன்
2. அதிஷ்ட விஞ்ஞானம் - சேதுராமன்
3. கன்னதாசனின் அர்த்தமுள்ள இந்துமதம்

 10 பாகங்களுக்கு ஒரே புத்தகம்.



தொடர்புக்கு:

**தமிழர் தகவல்,**

லண்டன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்மிகவாதிகளுக்கு


## அரிய சந்தர்ப்பம்

**தமிழ்நாட்டில் உள்ள கோயில்களில் திருவிழா காலங்களில் சுவாமியை தரிசிக்கும் வாய்ப்பை நீங்கள் அடைய வேண்டுமா?**



### திருவிழா – சுற்றுலா

ஆடிமாதம் 5ம் திகதி புறப்பட்டு ஆடி 15ம் திகதி வரையிலான திருவிழா சுற்றுலா - ஆடி 10 திகதி ஞாயிற்றுக்கிழமை சிதம்பரம் ஆனி உத்தரம் தேர் திருவிழாவும் - ஆனி உத்தரம் நடராஜனின் அபிஷேகமும் - அத்துடன் ஆறுபடை முருகன் கோவில்கள், திருவண்ணாமலை மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோவில் தரிசனமும் குறிப்பிட்ட இருக்கைகள் உள்ளதால் உங்கள் இருக்கையை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













லண்டனில் முதல் தர பொன்னி அரிசி AMIRTAA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நல்ல சோறு சாப்பிட வேண்டுமா AMIRTAA அரிசி வாங்குங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ANJAPPAR
Chettinad Indian Restaurant

ANJAPPAR CATERING

Menu



HIGH CLASS INDIAN VEGETARIAN AND
NON VEGETARIAN TAKE AWAY

JUST EAT

020 7438 20 23 - 0742 1763 518

www.anjappartakeaway.co.uk

admin@anjappartakeaway.co.uk

229, HIGH STREET NORTH, EAST HAM, E6 1JG | LONDON

Follow Us on

லூசியத்தில் முதலாவது தமிழ்க்கடை

கற்பகம்

தங்கள் சேவையை விரிவாக்கியுள்ளார்கள்

KATPAKAM

உடன் காய்கறிகள், பழ வகைகள்
உடன் பங்கு இறைச்சி
தமிழ் ஆடியோ, வீடியோ தமிழ்படங்கள்
அனைத்தும்ஒரே இடத்தில்






இப்பொழுது
விற்பனையில்...


36, Loampit Hill Lewisham
London SE 13 7SW
Tel : 208 694 88 10


லண்டனில் முதல் தர பொன்னி அரிசி AMIRTAA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

AYNGARAN INTERNATIONAL
PROUDLY PRESENTS

UPCOMING RELEASES
















Largest Tamil Entertainment Distributors In The World - For Further Details : 020 8543 4477

YouTube www.youtube.com/ayngaraneurope www.facebook.com/ayngaran web: www.ayngaran.com https://twitter.com/ayngaran_intl

நல்ல சோறு சாப்பிட வேண்டுமா AMIRTAA அரிசி வாங்குங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










லண்டனில் முதல் தர பொன்னி அரிசி AMIRTAA


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










நல்ல சோறு சாப்பிட வேண்டுமா AMIRTAA அரிசி வாங்குங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




*ஆரெம்கேவியின் டிசைன் ஸ்டூடியோவில் கைதேர்ந்த நெசவாளர்களால்,
உரிமம் பெற்ற தொழில் நுட்பத்தில் (Patented* Techniques) உருவாக்கப்பட்ட உயர்ந்த படைப்புகள்.

சென்னை - ஃபோரம் விஜயா மால், வடபழனி,
ஃபீனிக்ஸ் மார்கெட் சிட்டி, வேளச்சேரி | பனகல் பார்க், தி.நகர்.
கோயம்புத்தூர் - ப்ரூக்ஃபீல்ட்ஸ், ப்ரூக்பாண்ட் ரோடு.
திருநெல்வேலி - வண்ணார்பேட்டை, வடக்கு ரத வீதி, திருநெல்வேலி டவுண்.
பெங்களூரு - ஒரையன் மால்.

toll free no.: 1800 425 3105 shop online at: www.rmkv.com

லண்டனில் முதல் தர பொன்னி அரிசி AMIRTAA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# AMIRTAA FOODS

## STEAMED WHEAT FLOUR

## அவித்த கோதுமை மா

என்றும் நல்ல
பொருட்களை தேடி
வாங்குங்கள்

**அமிர்தா AMIRTAA**

அவித்த கோதுமை மா
இப்பொழுது
லண்டனில்
அறிமுக விலையில்
விற்பனையாகிறது




**Katpakam**
Lewisham

**Prime Food & Wine**
Tooting

**Eelam Shop**
Catford

**இப்பொழுது விற்பனையில்...**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




R. Pathmanaba Iyer
27-B, High Street,
Plaistow
London E13 0AD

Top-up your SIM online or where you see the following signs:
TESCO Sainsbury's ASDA WHSmith Martin McColl

Customers should opt-in by texting SAVE to 2525 to be eligible to get the special rates. Customer who did not opt-in will be charged at standard rates. Opt-in save promotional tariff is valid from 25.02.2015. Customers with India 1p/min promotion ( top up offer) should not opt-in to this special rates. If you opt-in to this promotion, you will not be able to avail India special rates.Promotional tariff valid for 30days from the Opt-in. Lycamobile reserve the right to amend or vary the terms of this promotion, or to withdraw this plan at any time on reasonable notice. Lycamobile UK Plan ("the offer") inclusive allowances are for calls and texts from the UK to standard UK landline (starting 01,02 or 03) and other UK mobile numbers, and for mobile internet usage in the UK. Other usage will be charged at standard rates. Allowances are valid for 30 days from the date of purchase. 4G availability is subject to handset model and location. Calls are rounded up to the nearest minute for the purpose of calculating remaining allowances. A customer may have only one offer on their account and may not buy another during the 30 day validity period. Any remaining allowance after 30 days will not be carried over into the next 30 day period should the customer repurchase their bundle. In bundle data usage is rounded up and charged in 1KB increments. Once the data allowance of a bundle has been fully used, additional data usage will be charged at standard rate. Lycamobile reserves the right to replace or amend the offer or these Terms & Conditions or to withdraw the offer at any time on reasonable notice. Note that promotional credit (credit which Lycamobile has given to customers for free) cannot be used towards purchasing a bundle. The offer is for non-commercial, private, personal use only - Lycamobile reserves the right to withdraw or suspend the offer or to disconnect you if we suspect that offer is being used for commercial purposes, for conferencing, or if it is not being used in a handset (in a SIM box for example), if it is being used for tethering or if any reason Lycamobile reasonably suspects that you are not acting in accordance with this policy where we consider that the usage was illegitimate. Promotional period: The offer is valid from 09.08.2015.

Lyca mobile
Call the world for less

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org